1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 30-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆனிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 23-ம் இலக்கம் |
|---|---|---|

## யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே குடும்பசெபமாலை இயக்கம்

### ஆசனக்கோவில் விசாரணைப்பங்கில் 19-6-55 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பம்

——: பரிமேலர் எஸ். அருளானந்தம் :——

### பூசித யுகம்

மாமரியன்னையின் புனித ஆண்டு முடிவடைந்துவிட்டது. அதன்பயனுக நிகழும் 1955-ம் ஆண்டு அன்னையின் பூசிதயுகம் ஒன்றை ஆரம்பித்துவிட்டிருக்கிறதெனவரைவது சாலவும் பொருத்தமாகும். வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகள் நமது ஸ்ரீ லங்காதுவீபத்திலே இந்தப் பூசிதயுகத்தை —குடும்பசெபமாலைப் பூசிதயுகத்தை ஆரம்பித்துவிட்டுப் போயிருக்கின்றனர். சர்வேசுரனுக்கும், தாயாருக்கும் ஸ்தோத்திரம்!

### சரித்திர சம்பவங்கள்

ஆனுல், எமதுசெல்வநாட்டிலே செபமாலைப் பக்தியானது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட ஓர்நவமான பக்திமுயற்சி அல்லவென்பதை நாம் அழுத்தமாகக் கூறியே தீரவேண்டும். கோவைக்குருமுனிவர்கள் தமது காலத்திலே எமது நாட்டில் ஊன்றிநாட்டிய கற்பக விருட்சங்களுள் இதுவும் ஒன்ருகும். முந்நூறுஆண்டுகளாகச் செபமாலைமாதா மருதமடுத்திருப்பதியிலே கிருபாசனங்கொண்டு எழுந்தருளியிருந்து, இலங்கை மக்களைத் தமது அரவணைப்பில் ஏந்திப்பாதுகாத்து வருகின்ருர் என்பதை யார்தான் அறியார்? நம்செல்வநாட்டில் நமோவென ஸ்தாபிக்கப்பட்ட செபமாலைத் தாசரின் மௌனசபை ஆச்சிரமமானது எங்கள்சீவமும், மதுரமும், தஞ்சமுமாகிய மோட்ச அன்னை எம்மேல் வைத்திருக்கும் விசேஷகரிசனையை உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுவதன்றே!

"செபமாலை, ஜெயமாலை" என்பதை நூற்றுக்கணக்கான சரித்திரசம்பவங்களினுல் ருசுப்படுத்த இயலும். ஒன்றுஇரண்டைக் கூறுவாம். இதைவெற்றிமாலையாக ஏற்றுக் கொள்ளும்படி முதன்முதலாகத் தாயார் ஏவிக்கற்பித்தது, அர்ச். சாமிநாதருக்கே. மேலைத் தேசங்களிலே சத்திய திருச்சபையை நசுக்கிவிடுமாறு கங்கணங்கட்டி நின்ற அல்பிஜென்சியன்ஸ் என்னும்பதிதரைச் செபமாலையே வேரோடு களைந்துவிட்டது. நம் முன்னோர் நமது சத்திய சற்சமயத்தைப் பாதுகாக்கப் புரிந்த மியூறே, லெப்பான்ரோ, லாறுேஷேல், வீயென்னு, பீற்றர் வாடன் என்னும் கோரயுத்த களங்களிலே அடைந்த வியக்கத்தக்க ஜெயங்கள்எல்லாம் கத்தோலிக்க யுத்தவீரர்கள் செபமாலை செபித்துத் தேவதாயாரின் அடைக்கலத்தை இரந்துவேண்டியதனுல் பெற்றுக்கொண்ட வெற்றிகள் அன்றே!

### நுண்ணிய வித்தெனினும் பாரியவிருட்சம்

செபமாலைப்பக்திமுயற்சி மிகவும் இலகுவானது. ஆயினும், அதன்வல்லமையை— சத்துவத்தை நாம் அளவிடமுடியாது. நமது பரிசுத்தபாப்பரசர் முதல் கல்வியறிவில்லாத ஏழைக்குடியானவரூருக இதைச் சுலபமாகச்செபித்து வேண்டுதல்செய்ய இயலும். இது அத்துணை இலகுவாய் இருத்தலினுலே இதன் கண்ணியத்தையும், வல்லபத்தையும் பலர்கண்டுணர்வதில்லை.

மாபெருங் காரியங்கள் பல முறைகளிலும் ஒருஅற்பனிலேயே தங்கியிருக்கும். மனுக்குலத்தின் சீரசீவியத்தைக் கடவுள் பெரும்பாலும் சிறியபுற்களின் நுனியிலேயே வைத்திருக்கின்ருர். ஆகாம், ஏவாள் புசித்தது ஒருகனியை. அதனுல் பயங்கரமான நித்தியகேட்டிற் குள்ளானது மன்பதை! கபிரியேல் என்னும் அதிதூதன் தமக்குச் செப்பியயாவையும் மாதா கேட்டதன்பின், இரண்டொருவார்த்தைகளிலே தமது சம்மதத்தைத் தெரிவித்தார். லத்தீனிலே இது இருசொற்களில் அடங்கியுள்ளது. "Fiat Mihi" — "அப்படியே எனக்கு ஆகக்கடவது." அதனுல் தேவன் மானிடனுனுர். மானிடஇரட்சணியமும் ஆரம்பமானது. கோலியாத்தென்னும் மலையொத்த கோர இராக்கதனைத் தோற்கடிக்கச் சிறியவாலனுகிய தாவீது ஐந்துகற்களுடனும், ஒருகவணுடனும் துணிந்து சென்ருன். ஒரேயொரு கல்லினுல் மலையைப்புரட்டியதுபோல் அவனை வீழ்த்திவிட்டு, அவன் சிரசைக் கொய்தான். செபமாலைத்தாயார் எங்கள்கையில் தந்திருக்கும் கவணும், ஐந்துகற்களும் செபமாலையும், அதன் ஐந்து காரணிக்கங்களுமே. நமமேல் கருணைபுரியும்படி பரமனைத்தானும் வழிந்திருக்கக்கூடிய சத்துவம்வாய்ந்ததுமாலே செபமாலையே.

### மலை வயிறுநொந்து பெற்றதாம் சுண்டெலியை

இன்றையஉலகம் கம்யூனிஸ்தர்எனும் நிரீச்சுரவாத பைசாசங்களினுல் பாதிக்கப் பட்டுப் பயங்கர அழிவுக்குத தப்பவியலாது தவிக்கின்றது. அணுக்குண்டுகள், சலவாயுக்குண்டுகள், கோபால்ற் குண்டுகள், விஷக்கிருமிக் குண்டுகளைக் கொண்டு அதற்குத்தப்பி உயிர் வாழலாமென்று வீணுகநினைந்து அவைகளையே தீவிரமாகத் தயாரிக்கின்றது. கடற்படை, தரைப்படை, ஆகாயப்படைகளைப் பிரமாண்டமாகத் திரட்டுகின்றது. சேனுபதிகளும், விஞ்ஞானிகளும் கோரசமராடுவதற்கென்று மார்புதட்டிப் போர்க்கறை கூவிநிற்கின்றனர். மந்திரிகளும், அரசியற் தந்திரிகளும் தலை விறைக்க, உடம்புவெயர்த்துக் களைக்க ஆலோசனை மகாநாடுகளிலே தொண்டைகிழியக் கத்தி வாதிக்கின்றனர். இந்த மகாநாடுகளுக்கோ கணக்குவழக்கில்லை. இவைகளால் விளைந்தபயன் யாது? அல்லோலகல்லோலமே. "அக்கையடி வெறுஞ் சிப்பியடி." மலை வயிறுநொந்து சுண்டெலியைப்பெற்றதாம்! ஆனுல், கையில் எடுக்கவேண்டியவை, செபமாலை இரத்தின மணிக் குண்டுகளேஎன்பதை ஐயோ! அவர்கள் அறியார்கள்.

### ஜெயத்தின் அடையாளம் திடங்கொண்ட பாணம்

மாதா நம்மைக் கேட்டுக் கொண்டது, ஒருஅற்பசெபக்கிரிகையையே. அது "செபமாலையை விடாப்பிடியாய்ப் பக்தியுடன் செபியுங்கள்" என்பதே. முதன்முதலாக நமது குடும்ப சீவியம் தூய்மையாக்கப்படவேண்டும். ஒவ்வொருகுடும்பமும் கிறீஸ்துதேவராசாவின் நிலையானகோட்டையாக நிறுவப்படுதல்வேண்டும். வரப்புயர நீர் உயரும். நீர்உயர நெல்லுயரும். நெல்லுயர வீடுயரும். வீடுயர நாடும், நகரும். அரசும் சிறந்து உயரும். அதேபோல ஒரு தேசத்திலே குடும்பசீவியம் சீராய்ச் சிறப்பாய், நேராய் நெறியராய் இருக்குமாயின் அந்நாட்டில்தான் சமாதானமெனும் நீரோசை இசைக்கும். பக்தியெனும் பாலுந்தேனும் பாயும். தெய்வம் இறங்கிஉலாவும் ஓர்பரகதியாய் இலங்கும். இதற்குக் குடும்ப செபமாலை சிறந்த ஆயுதம்.

பெரியகொன்ஸ்தந்தீன்எனும் சக்கிரவர்த்தி யுத்தமுனைக்குச் சேனைகளுடன் செல்லுமுன் ஆண்டவரைஇரந்து தமக்கு வெற்றிதர வேண்டுமெனப் பிரார்த்தித்துநின்ருர். வானத்திலே பிரபைவீசும் ஓர் பாரிய சிலுவைஅடையாளம் அவருக்குக் காண்பிக்கப்பட்டது. "இந்த அடையாளத்தைக் கொண்டு நீ ஜெயம்அடைவாய்" என்ற அசரீரிவாக்கு அவர்செவிகளில் தொனித்தது. திருச்சிலுவைக் கொடியைத் தாங்கி யுத்தம் புரிந்தார். மாபெரும் ஜெயம் அடைந்தார். நாமும் இந்த ஆபத்துகள் தேங்கி நிறைந்தகாலத்திலே, மன்பதையைத் தாக்கிநிற்கும் நரகசாத்தானின் சைனியங்களை முறியவடித்தோட்ட வேண்டுமானுல், செபமாலைக்கொடியைக் கரத்தேந்தவேண்டும். அப்போது நம்முடைய சத்துராதிகளைப் பறக்கடிக்கலாமென்பது திண்ணம். அதுதான் செபமாலைத் தாயார் எமதுகைகளில் வைத்திருக்கும் கவணும், கல்லும். செபமாலையைச் செபித்து மன்ருடுவோமாக! அதிலும் விசேஷமாகக் குடும்பசெபமாலையை எமது திடங்கொண்ட பாணமாகப் பிரயோகிப்போமாக!

### சேர்ந்து கொள்வோமாக!

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, மலாயா, சீயம்ஆதியாம்நாடுகளிலே வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியவர்கள் சுற்றுப்பிரயாணஞ்செய்து தொடக்கிவிட்டுப்போன குடும்பசெபமாலைப் படையணி இயக்கத்தின் விளைவாக அந்நாடுகளிலுள்ள முப்பதுலட்சம் கத்தோலிக்கமக்கள் தினமும் குடும்பசெபமாலையை ஒழுங்காகச் செபித்துவருவதாக உறுதிவாக்களித்திருக்கின்றனர். இந்தமுப்பதுலட்சம் மக்களில் நாமும் அடங்குவோமா? அடங்கியிருப்போமாயின் மாதாவுக்குத் தோத்திரஞ் சொல்லவேண்டியதே. ஆனுல், நாம் அவர்களிலே அடங்கவில்லையாயின் இதோ யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் ஆரம்பமாகவிருக்கும் குடும்ப செபமாலைப் படையணியில் சேர்ந்துகொள்வோமாக!

"செபமாலை, ஜெயமாலை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலை இல்லாமலே

சாப்பிட ஒருநாள் தவறினாலும் செபமாலைசொல்லமட்டும் ஒருநாளும்தவறாதவன் செல்வராஜ். மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்படும் முல்லையூர்ச் செபமாலை இராக்கினியின் திருவிழாவிற்குப் போகவேண்டுமென்று நெடுநாளாகவே அவனுக்கு ஓர்ஆசைஇருந்தது. அந்தஆசையை நிறைவேற்றிக்கொள்ளத் தக்கசமயம் அன்றுவாய்த்ததை அவன் ஒருபெரும்பாக்கியமாகக் கருதினான்.

ஆனால், அவன் சேரவேண்டிய இடத்திற்கு விரைவில் போய்ச்சேர முடியவில்லை. மணியும் பத்தாகிவிட்டது. நெடுநேரமாக அவன் பஸ்ஸைக் காத்திருந்தான். பஸ் வந்தபாடில்லை. நடந்தாவது சென்றுவிடலாமென்றாலோ இரவிலே பத்துமைல்தூரம் தன்னந்தனிமையாக நடந்துபோக அவன் துணியவில்லை.

முல்லையூருக்குக் கடைசியாக விடப்படும்பஸ் அப்போதுதான் வந்துநின்றது. முண்டியடித்துக்கொண்டு எப்படியோ அதில் ஏறிக்கொண்டான். பஸ்புறப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. டிக்கெற்கொடுக்கவந்த கண்டக்றர் அவனிடம் காசுக்குக்கையைநீட்டவே செல்வராஜ் அவசரமாகச் சட்டைப்பைக்குள் கையைவிட்டுத் துழாவிப்பார்த்தான். மறுகணம்அவன் மின்சாரக்கம்பியை மிதித்தவன்போல் துள்ளினான். எதையோ பறிகொடுத்தவன்போல் திருகத் திருகவிழித்தான்.

'என்னஐயா! காசுப்பைகாணாமல் போய்விட்டதா?' என்று விசாரித்தார் ஒருவர்.

'இந்தச் சந்தடியிலெல்லாம் நமது பொருட்களைச் சாக்கிரதையாகப்பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று புத்தி சொன்னார் மற்றொருவர்.

'என்னஐயா! காசு இல்லாமலே பஸ் ஏறிவிட்டுக் கைப்பை காணாமல் போய்விட்டதுபோல் நடிக்கிறீரோ?' எனக் கடுகடுத்துக்கூறினான் கண்டக்றர்.

'அதெல்லாம் ஒன்றுமில்லைஐயா; இந்தாரும் உமதுகாசு, அதற்குள் பிரமாதமாகக் கோபித்துக்கொள்ளுகிறீரே' என்று சொல்லிக் கைப்பையிலிருந்து காசுப்பையை எடுத்துக் காசைக்கொடுத்தான் செல்வராஜ்.

பிறகுபரபரப்புடன் தான்கொண்டுவந்த பொருட்களையெல்லாம் எடுத்துவைத்து, அவைகளில்ஏதோ ஒன்றை அவசரம்அவசரமாகத்தேடினான். அப்போதுபஸ்ஸில் பிரயாணஞ்செய்த மற்றவர்களுக்குச் செல்வராஜ் செய்யும் காரியமெல்லாம் ஒருசுவாரசியமான வேடிக்கையாகத்தான் இருந்தது. வைத்தகண்ணை வைத்தபடியே அத்தனைபேரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'என்ஐயா! காசுப்பைதான் அகப்பட்டுவிட்டதே; வேறு எதைத்தான் இவ்வளவு ஆத்திரமாகத் தேடுகிறீர்?' என்று விடாப்பிடியாக விசாரித்தார் ஒருவர். செல்வராஜ் பதில்ஒன்றும் சொல்லவில்லை.

'விசித்திரமான மனுஷனாய் இருக்கிறாரே; எதைத்தொலைத்துவிட்டு இப்படித் தேடுகிறீரென்றால் பதில்கூடச் சொல்ல மாட்டேனென்கிறாரே? என்றார் மற்றொருவர். ஆனால், செல்வராஜ் வெறிபிடித்தவன்போல் எல்லாப் பொருட்களையும் குடைந்துகுடைந்து எதையோ தேடிக்கொண்டிருந்தான். அவன் தேடியபொருளோ அகப்படவில்லை. அதனால், பஸ்ஸில்செல்ல அவனுக்குமனம் ஒப்புக்கொள்ளவில்லை.

'ஐயா! பஸ்ஸை நிறுத்தச்சொல்லுங்கள்!' என்று கூச்சலிட்டான்.

'எதற்காகப் பஸ்ஸை நிறுத்தச் சொல்லுகிறீர்? ஏன், என்னநடந்தது?' எனச் சீறிவிழுந்தான் கண்டக்றர்.

'நான்உடனே இறங்க வேண்டும்; இப்போதே பஸ்ஸைநிறுத்தச் சொல்லுகிறீரா, இல்லையா?' என்று அதிகாரத்தொனியில் செல்வராஜ் இரைந்தான்.

இதைக்கேட்டபலர் கைகொட்டிச் சிரித்தனர். 'ஒருவேளை, பைத்தியமாக இருக்குமோ?' என்று கூட வெளிப்படையாகச் சிலர்கேலிசெய்தனர். பஸ்ஸும்நின்றது. செல்வராஜ் இறங்கிப் பரபரப்புடன் வந்தவழியே நடக்கஆரம்பித்தான்.

அவசரமாக வீட்டிற்குத திரும்பிவந்த அவனைக்கண்ட அவன்மனைவி இரத்னா, 'ஏன் இப்படி வந்துவிட்டீர்கள்? நீங்கள் திருவிழாவிற்குப் போகவில்லையா?' என்று கேட்டாள்.

'என் செபமாலையைமறந்து வைத்துவிட்டுப் போய்விட்டேன் இரத்னா! அதற்காகத்தான் இப்படித்திரும்பிவந்தேன்' என்று சொல்லிச் செபமாலையை எடுத்துக்கொண்டான் செல்வராஜ்.

'அடேயப்பா, இதற்குத்தானா இத்தனை ஆத்திரம்! செபமாலை இல்லாமலே நீங்கள் திருவிழாவிற்குப் போகக் கூடாதா?' என்று கேள்விபோட்டாள் இரத்னா.

அவள் கேலியாகத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டாள். அதைக்கேட்கப் பொறுக்காதவனாகிய செல்வராஜ், பொங்கியெழுந்தகோபத்தை அடக்கிக் கொண்டான். செபமாலையின் மகிமையை முற்றிலும் உணர்ந்துகொள்ளச் சக்தியில்லாத தனதுமனைவியின் பலவீனத்தை எண்ணிவருந்தினான்.

திரும்பக் கால்நடையாகவே அவன் முல்லையூருக்குப்போனான். வழிநெடுகச் சனங்கள் சந்தோஷ ஆரவாரத்துடன் போய்க்கொண்டிருந்தாலும் செல்வராஜின்மனமோ செபமாலை சொல்வதிலேயே லயித்திருந்தது. அவர்களின் இடையறாத இரைச்சல் அமைதியுடன் செபமாலைசொல்லவிடாது அவனுக்கு உண்டுபண்ணியதொல்லையல்ல, ஆனால், பத்துமைல் தூரத்தையும் நடந்துசெல்வதுதான் அவனுக்குக் களைப்பையும், சலிப்பையும் உண்டுபண்ணின.

ஆனால், செபமாலையைஎடுக்க வீட்டிற்குவராமலே பஸ்ஸில்போயிருந்தால் எவ்வளவு சௌகரியமாயிருந்திருக்கும்!' என்று அவன்மனம் ஒருசோதனையான எண்ணத்தை உண்டுபண்ணியது. 'அவசியமில்லாது ஏன்பஸ்ஸை விட்டு இறங்கினாய்?' என்றுமேலும் அவன்மனம் இடித்துக்காட்டியது.

'இரத்னா சொல்லியதுபோல் செபமாலை இல்லாமலே திருவிழாவிற்குப் போயிருக்கக்கூடாதா?' என்றுகூட அவன்மனம் தோல்விமனப்பான்மையை உருவாக்கித்தந்தது.

* * *

நிற்க, அடுத்தநாள்காலை ஊர்முழுவதும் ஒருதிடுக்கிடும்செய்தி காட்டுத்தீபோல் பரந்து எல்லோர்வாயிலும் அடிபட்டது. பயங்கரமான அச்செய்தியைப் பத்திரிகைகளெல்லாம் மிகத் தெளிவாகப் பிரசுரித்திருந்தன. அச்செய்தியைப் பத்திரிகைகளிலே கண்டதே செல்வராஜ் திடுக்கிட்டான், திகிலுற்றான், திகைத்தான், மலைத்தான். பயத்தால் அவன்உடல் நடுங்கியது.


'அப்போது ஏன் இவ்வாறு நடுங்குகிறீர்கள்?' என்று விசாரித்தாள் இரத்னா. 'உம்... ஒன்றுமில்லை ... சாகவிருந்தநான் உயிர்தப்பிப் பிழைத்துக்கொண்டேனே யென்பதை நினைக்கும்போது எனக்குத்திகிலதான் ஏற்படுகிறது!'

'புரியாமல் பேசுகிறீர்களே? கனவு ஏதாவது கண்டீர்களா?'

'உம்...உனக்குக் கேலிசெய்வதைத் தவிர வேறு என்னதெரியும்? அன்றைக்குநான் செபமாலைஎடுப்பதற்காகப் பஸ்ஸைவிட்டு ஓடிவந்ததற்குக்கேலி செய்தாயே; அந்தச் செபமாலையால்தான் என்உயிர்பிழைத்தது என்று நீ அறிவாயா? இந்தா, இதைப்படித்துப்பார்!'

பரபரப்புடன் பத்திரிகையைவாசித்தாள் இரத்னா. பின்வரும் செய்தி அதில் பிரசுரிக்கப்பட்டிருந்தது; "பெருங்

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

# பூரண  கிரகணம்

**❊ நமது வாழ்நாளில் ஒரேயொருமுறைமட்டும்கண்டு களிக்கக்கூடிய அதியற்புத காட்சிஇது.**

**❊ பலநூற்றுண்டுகளுக்கு ஒருமுறை மாத்திரம் நிகழும் இந்த அதிசயம் இம்மாதம் 20-ந் தேதி இலங்கையில் நிகழப்போகிறது.**

இம்மாதம் 20-ந் திகதி திங்கட்கிழமை வானமண்டலத்திலே ஓர்அற்புதகாட்சி தோற்றவிருக்கிறது. அன்று நாம்காணப்போகும் இந்தஅற்புதகாட்சியாகிய பூரணசூரியகிரகணம் புதுமையானது மாத்திரமல்ல, எமது வாழ்நாளில் இதைத்தவிர வேறோர் பூரணசூரியகிரகணத்தைக் காண்பதரிது. இதுபோன்று வேறோர் பூரண சூரியகிரகணத்தைக்காண இரண்டு மூன்று நூற்றாண்டுகள் செல்லும். சூரியகிரகணமும், சந்திரகிரகணமும் புதியசம்பவங்களல்ல. வானமண்டலம் உண்டாக்கப்பட்ட அந்தக்காலமுதலே இவைகள் உண்டாகிவருகின்றன. ஆயினும், இவற்றின் நிகழ்ச்சிபற்றிய விபரங்களை மனிதன் அறிந்துகொண்டது சரித்திரகாலத்தின் பிற்பகுதியில்தான். பூமிதான் ஒரேநிலையாய் நிற்கிறது; சூரியன், சந்திரன்போன்றன யாவும் பூமியைச்சுற்றி வலம்வருகின்றன என்றுதான் அக்காலமுதல் தவறாக்கொள்ளப்பட்டுவந்தது.

## பிரபல வானசாஸ்திரி

இந்தக் கொள்கையைப்போக்கி உண்மையை எடுத்துக்காட்ட 1473-இல் போலாந்தில்பிறந்தவரும், வானசாஸ்திரத்தின் தந்தையெனப் புகழப்படுகிறவருமான கோப்பேர்னிக்கஸ் (Copernicus) அவர்கள் சரித்திரப்பிரசித்திவாய்ந்த தமது 'சுழற்சி'என்னும் நூலிலே தம்முடையஆராய்ச்சியிற் கண்ட அரிபதத்துவத்தை வெளியிட்டார். அதாவது, "சூரியன்தான் ஒரேநிலையாய் நிலைத்துநிற்பது; ஏனைய பூமி, சந்திரன்முதலியவைகளே சூரியனைச் சுற்றி வலம்வருகின்றன" என்ற பெரிய உண்மையை எடுத்துக்காட்டி வானசாஸ்திரத்திலேயே ஓர்மாபெரும் புரட்சியையுண்டுபண்ணினார், பெரும் கணிதவிற்பன்னரும், விஞ்ஞானியுமான கோப்பேர்னிக்கஸ். "பூமிதான் ஒரேநிலையாய் நிற்பது" என்றகொள்கையை வலியுறுத்திவந்த கிரேக்கர்முதல் மத்தியகாலம்வரையுள்ள வானசாஸ்திரிகட்கு எதிராக இவர் தமதுகொள்கையை வெளியிட்டார். விஞ்ஞானமுறையிலே சூரியசந்திர கிரகணங்களின் விசித்திரங்களை நமக்கு எடுத்துவிளக்கியவரும் இவரே.

## கிரகணம் உண்டாகும்விதம்

சூரியன் ஒரேநிலையாய் நிலைத்துநிற்பது. இதைச்சுற்றிப் பூமிமுதலிய ஏனையகிரகங்கள் வலம் வருகின்றன. பூமியைச்சுற்றிச் சந்திரனும், பூமியோடுசேர்ந்து சந்திரனுமாக இரண்டும் சூரியனைச்சுற்றி வலம்வருகின்றன. இவற்றின்பிணைப்பாலே— இவைகள் சென்றுகொண்டிருக்கும விசித்திர போக்குகளினாலேதான் — சூரிய, சந்திர கிரகணங்கள் ஏற்படுகின்றன.

நமதுநாட்டில் இச்சூரிய, சந்திர கிரகணங்கள்பற்றிய நிகழ்ச்சிகள் மிகவும் வியப்பைஅளிக்கக்கூடிய கற்பனைநயம் செறிந்த கதைகளாக வழங்கிவந்திருக்கின்றன. சூரிய, சந்திரர்கள் காலக்கிரமத்தில் கேதுஎன்னும் கொடிய இராட்சத அரவத்தின்பிடியில் சிக்குவதினால்தான் கிரகணங்கள் ஏற்படுகின்றன என்றகொள்கைதான் பழங்கதையாக எமதுநாட்டில் வழங்கிவந்திருக்கின்றது.

## சந்திர கிரகணம்

நாம் சந்திரகிரகணங்களைப் பார்த்திருக்கின்றோம். சந்திரனுக்கும், சூரியனுக்குமிடையில் பூமிவரும்பொழுது பூமியின்சாயை சந்திரனில்விழுவதனால் சந்திரகிரகணம் உண்டாகிறது. பூரண சந்திரகிரகணமோ, அன்றேல் பார்சுவ [illegible] சந்திரகிரகணமோ பௌர்ணமிகாலத்தில்தான் ஏற்படுகின்றன. அங்ஙனம் இவைகள்ஏற்படுவது, சூரியன்—சந்திரன்—பூமிஆகிய மூன்றும் ஒரேநிரையில் இக்காலத்தில் வருவதினாலேயாகும். ஆயினும், இத்தகையகிரகணங்கள் ஒவ்வொரு பௌர்ணமியின்போதும் ஏற்படுவதில்லை. ஏனெனில், பூமி, சந்திரன் என்பனவற்றின் சுழற்சியில்ஏற்படுகின்ற கோணங்களின் வித்தியாசங்களினாலே பூமி—சூரியன்—சந்திரன் ஆகியன ஒரேநிரையில் சிலகாலத்தில்தான் வாமுடிகிறது. பூமி தனதுபருமனில் சந்திரனைவிடப் பெரிதாயிருப்பதால் பூரணசந்திரகிரகணம் சிலகால் பூமியின் அரைவாசிப் பகுதிக்கே காட்சியளிக்கக் கூடியதாயிருக்கிறது.

## சூரிய கிரகணம்

சூரியகிரகணம் அப்படியன்று. சூரியனின்ஒளி சந்திரனால்மறைக்கப்பட்டு அதன்சாயை பூமியில் விழும்பொழுதுதான் சூரியகிரகணம் உண்டாகின்றது. சந்திரன் தனதுபருமனில் மிகச்சிறிதாயிருப்பதால் அதன்நிழல்ஒருசிலதேசங்கள்மீது மாத்திரமேவிழுகின்றது. இது காரணமாகச் சூரியகிரகணத்தைச் சம்பந்தப்பட்ட தேசத்தவர்மட்டுமே அவதானிக்கமுடியும். பூரண சூரியகிரகணம் ஒரே இடத்தில் மீண்டும்ஏற்படப் பலஆண்டுகள்செல்லும். ஓரளவு கணக்கிட்டுக் கூறுகிறதானால் 350 வருடங்கட்குமேல்—மூன்றரை நூற்றாண்டுகளுக்குமேல் செல்லும்.

## நீடிய சூரியகிரகணம்

இலங்கையிலே கடந்தகாலங்களில் நாம் சூரியகிரகணங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், அவைகள் பூரண சூரியகிரகணங்கள்அல்ல. இவைகள் பார்சுவ கிரகணங்களாகவே எமக்குக் காட்சியளித்தன. ஆனால், இம்மாதம் 20-ந் திகதியன்று நாம்காணவிருக்கும் பூரணசூரியகிரகணம்போன்றதுஒன்றை இலங்கைமக்கள் கடைசியாகக்கண்டது 1871-ம் ஆண்டு மார்கழிமாதம் 11-ந் திகதியாகும். இப்பூரண சூரியகிரகணம் யாழ்ப்பாணக் குடாநாட்டினூடாகச் சென்றது. இம்மாதம் 20-ந் திகதியன்று நாம் காணவிருக்கும் பூரணசூரியகிரகணம் ஆபிரிக்காக்கண்டத்தின் கிழக்குக்கரையிலே சூரிய உதயவேளைதொடங்கிப் பிலிப்பைன்ஸ் தீவுகள் ஊடாகச்சென்று சூரியஅஸ்தமனவேளை முடிவடைகிறது. இந்தப் பாதையின் வழியில்தான் இலங்கைத் தீவு இருக்கின்றது. இலங்கையிலே அதிகநேரம் காட்சியளிக்கக்கூடியதாய்ப் பூரணசூரியகிரகணம் தோற்றுவது இதுவே முதற்தடவையாகும். இலங்கையிலேஇம்முறை அநேகமாக 2 நிமிஷமுதல் 4 நிமிஷம்வரை பூரண கிரகணநேரம் நீடிக்கவிருக்கிறது. சில ஆராய்ச்சியாளரின் முடிவுப்படி சராசரி ஏழுநிமிஷங்களுக்குமேல் பூரணசூரியகிரகணம் தோற்றுவது 1200 வருடங்களுக்கு ஒருதடவையேயாகும். இத்தகைய நீடியநேர பூரணகிரகணத்தை இலங்கைத்தீவிலே நாம்காணப் போவது எமது அதிர்ஷ்டமெனலாம். கொழும்புதொடக்கம் திரிகோணமலைஈறாகச் சூரியனின்ஒளி பூரணமாக மறைக்கப்பட்டுக் குறைந்தபட்சம் 150 மைல்அகலமான பிரதேசம் பூரண சூரியகிரகணத்தால் இருளிலே மூழ்கவிருக்கிறது. அநேகமாக இலங்கையின் வட, தென் கடைசிஎல்லைகளில் இஃது பார்சுவகிரகணமாகக் காட்சியளிக்கும். இந்தச் சூரியகிரகணம் சீனா, ஜப்பான் தேசங்கள்தொடக்கம் ஆஸ்திரேலியாவின்வடபகுதிவரை பார்சுவகிரகணமாகக் காட்சியளிக்கும்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## சர்வதேச சற்பிரசாத மகாநாடு

பிறேசில்நாட்டின தலைப்பட்டணமாகிய றையோ டி ஜனேய்ரோ நகரிலே அடுத்து நிகழும் ஆடிமாதம 7-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் 36-வது சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்கு ஆயத்தமாய் நகரசபைத்தொழிலாளர்கள் அந்நகரிலுள்ள பிரதான கட்டிடங்களின் தலைவாயில்களிலுள்ள தூசிகள் ஆதியவற்றைத் துடைத்து அகற்றுவதில் ஈடுபட்டு வருகின்றார்கள். அங்குகுவானபாரூக் குடாக்கடல்நீளம் மண்போட்டு நிரப்பப்பட்டிருக்கும் பெருந்தேசப்பரப்பிலேயே மகாநாட்டின் பிரதான வைபவங்கள் நடந்தேறுப. அவற்றிற்கென்று 13 அடி உயரமும், 95 அடி நீளமுமான பலிபீடம் ஒன்று சித்தஞ்செய்யப் படுகின்றது. பிறநாடுகளைச் சேர்ந்த பத்துலட்சம் யாத்திரிகர்கள் மகாநாட்டுக்குச் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. பகிரங்ககட்டடங்களும், பாடசாலைகளும் இவர்கள் தங்குவதற்கான இடவசதிகள் அளிக்கும். கடல்மார்க்கமாக அங்குசெல்வாருள் அநேகர் குடாக்கடலில் நங்கூரமிட்டுநிற்கும் தங்கள் கப்பல்களையே மிதக்கும் ஹொட்ரேல்களாக உபயோகிப்பார்கள். கோர்க்கோவாடோ குன்றின் மீது நிறுவிநிற்கும் திவ்வியகர்த்தரின் பிரமாண்டமான திருச்சுரூபத்தை யாத்திரிகர்கள் கண்டுகொள்ளும்படியாக அக்குன்றின் உச்சியிலுள்ள பொலிஸ் வானொலிக்கோபுரம் அகற்றப் பட்டிருக்கிறது. மகாநாட்டுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியாகக் கருதினால் மசெல்லா ஆண்டவர் செல்லவிருக்கின்றார்.

## பாப்பரசரும் இந்தியகருதினலும்

திவ்விய இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்கு முதனாளாகிய சென்ற வைகாசிமாதம் 28-ந் திகதியன்று பரிசுத்தபாப்பரசர் பம்பாய்நகர் அதிமேற்றிராணியாராகிய கருதினல் வலேரியான் கிருசியாஸ் ஆண்டவருக்கு 45 நிமிஷநேர பிரத்தியேக பேட்டி அருளலாயினர். இந்தப் பேட்டியின் பின் கருதினல் ஆண்டவர் பேசியபோது: தம்மைத் தரிசிக்கிற மேற்றிராணிமாருக்கு அரிதாகவே தனிப்பேட்டிகள் அருள்கிற பாப்பரசர் "அதிகம் நல்ல ஆரோக்கியமும், அதிக ஊக்கமும், சோபிதமுகமுமுடையவராய்" இருக்கக்கண்டோம்; "இந்தியாவிலுள்ள ஐம்பதுலட்சம் கத்தோலிக்கமக்களினதும் பிள்ளைகளுக்குரியவந்தனைவழிபாட்டையும், இந்தியாவிலுள்ள கத்தோலிக்கர் அல்லாத கோடிக்கணக்கான நமது அன்பர்களின் நல்விருப்புகளையும்" பரிசுத்த பிதாவுக்குச் சமர்ப்பித்தோம்; மிக்கப் பற்றுள்ள தமது அன்பையும், ஆசீர்வாதங்களையும் அகில-இந்தியாவுக்குமே கொண்டுசெல்லுமாறு அவர் நம்மைக்கேட்டுக்கொண்டாரெனக் கூறிநின்றார். பிரத்தியேக பேட்டியின்பின் பரிசுத்த பிதா தம்முடைய நூல்நிலையத்திலிருந்து கருதினல் ஆண்டவர் சமேதராய் அணித்தாயிருந்த ஓர் அறைக்குச்சென்று, அங்கே சமுகமாயிருந்த கருதினல் ஆண்டவரது கோஷ்டியைச்சேர்ந்தவர்களுக்குச் சோபனவாழ்த்துக் கூறினர். அவர்களிலே பம்பாய்ப் பிரதமநீதியரசர் திரு. எம். சி. சக்கிளா தம்பதிகளும் அடங்குவார்கள்.

## ஆலயமணிகளின் ஆர்ப்பரிப்பு

ஆஸ்திரியாவுக்குச் சுதந்திரம் அளிக்கும் உடன்படிக்கைக்கு நான்கு வல்லரசுகளினதும் வெளிநாட்டுமந்திரிமார் அன்று ஞாயிற்றுக்கிழமை காலை கைச்சாத்திட்டபோது வீயென்னா நகரிலுள்ள அர்ச். முடியப்பரது ஆசனக்கோவிலின் "பும்மெறின்" என்ற மிகப்பெரியமணியானது ஒருமணித்தியாலமாக நாதகீதஞ்செய்து ஆர்ப்பரிக்கலாயிற்று. பதினேழுவருடகாலம் பிறநாடுகளால் ஆக்கிரமிக்கப்பட் டிருந்தபின் ஆஸ்திரியா அடைந்துகொண்ட சுதந்திரத்தைக் கொண்டாடுமுகமாக அன்று உருமத்தின்போது அந்நாடுமுழுவதிலுமுள்ள ஆலயமணிகள் ஒன்றுசேர்ந்து ஆர்ப்பரிக்கலாயின. தங்கள் நாடுசுதந்திரத்தைத் திரும்பவும் அடைந்துகொண்டதையிட்டு ஆஸ்திரிய மக்களின் ஆனந்தத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்து அன்று பிற்பகல் கருதினல் இன்னிற்சர் ஆண்டவர் ஆசனக்கோவிலில் "தெதேயும்" பாடினர். அதன்மேல் கோவிலுக்கு வெளியே அகில-ஆஸ்திரிய கத்தோலிக்க இளைஞர் இயக்கங்களின் மகாகூட்டம்ஒன்று நடைபெறலாயிற்று.

## அர்ச். மாற்குவின் மகாலயம்

இத்தாலியிலே வெனிஸ்நகரிலுள்ள அர்ச். மாற்குவின் மகாலயம் கீழ்சதுப்பில் இறங்கிக்கொண்டுபோகிறது. அதனை மேலும் கீழிறங்கவிடாது தடுத்துவைக்குமாறு இத்தாலியஅரசாங்கம் 1,60,000 ரூபா உதவ முன்வந்திருக்கிறது. பதினோராம் நூற்றூண்டுக் கட்டடமாகிய இது சிலவருடங்களாகப் பதமையாகவும், சமமில்லாமலும் கிழிறங்கிக்கொண்டு போவதாலே அதன்கட்டுக்கோப்பு மாத்திரமல்ல, ஆனல், அதன் உட்புறத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கின்ற விலைமதித்தற்கரிய நானவர்ணச் சலவைக்கல் லிழைத்த சித்திரவேலைப்பாடுகளுமே சேதமடையும் அபாயநிலை ஏற்பட்டிருக்கிறது. வருடந்தோறும் வெனிசிய கடலேரியினூடாகப் பெருக்கெடுத்துச்செல்லும் கடல்நீரோட்டமானது இந்த மகாலயத்தின் அடித்தளத்தைச் சேதப்படுத்தியுள்ளது. வெனிஸ்நகரின்பாதுகாவலரும், சுவிசேஷகருமான அர்ச். மாற்குவின் முதல்மகாலயமானது அவரது திருமேனியை வைப்பதற்கென ஓர்திருசேத்திரமாக கி. பி. 829—832-ம் [illegible] கட்டப்பட்டது. [illegible] சாந்திரியா நகரிலிருந்து இருவர்த்தகர்களால் அங்குகொண்டுபோகப்பட்டது. பழைய மகாலயம் நெருப்பினால் அழிக்கப்பட்ட காரணமாகத் தற்போதைய மகாலயம் 1063-ம், 1094-ம் ஆண்டுகளுக்கிடையிலே திரும்பக் கட்டியெழுப்பப்படலாயிற்று.

## 75 வருட சந்தாதாரர்

லண்டன்நகரிலே கடந்த 95 வருடகாலமாகப் பிரசுரமாகிக்கொண்டுவரும் "யூனிவேர்ஸ்" என்ற பிரபல கத்தோலிக்க வாரப்பத்திரிகையின் அதிகம் பழைய சந்தாதாரர் யாரென்ற கேள்வி சமீபத்தில் பிறந்தபோது, காடிவ்நகரைச்சேர்ந்த திரு. ஜோண் டொனவன் அவர்கள் 'தாமே' யென்று பதில் அளித்திருக்கின்றார். றெயில்வேயில் கடமையாற்றிவந்து இளைப்பாறியுள்ள 84 வயதுடையஇவர் கடந்த 75 வருடங்களாக "யூனிவேர்ஸ்" பத்திரிகையை ஒழுங்காக வாசித்துவந்திருக்கின்றார். அதாவது இவர் ஓர்பாலியனாக இருந்தபோது டௌலேயிஸ் எனுமிடத்தின் பங்குக்குருவரான வண. ஜோண் பிப்பெற் சுவாமியார் அப்பத்திரிகைப்பிரதிஒன்றைக் கொடுத்ததுமுதல் இவர் அப்பத்திரிகையைக் கிரமமாகப்பெற்று வாசித்துவந்திருக்கின்றார். இவரின் புதல்வி தொமினிக்குவின் சபையைச்சேர்ந்த சங். சிஸ்றர் மேரி ஜோண்.

## எஞ்சிய நான்குபெண்மணிகளும்

கனடாதேச காலெண்டரில் ஒரேபிரசவத்திற் பிறந்து உலகப்பிரசித்திபெற்ற டையோன்னேகுடும்பத்துப்பெண்மணிகள் ஐவரிலும் தற்போதுஎஞ்சியிருக்கும் நால்வரும் தங்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டப்பணமாகிய 3,50,000 பவுணையும் சென்ற வைகாசிமாதம் 28-ந்திகதியாகிய தங்களின் 21-வது வருட பிறந்த பெருநாளன்று பங்குபாகமாகப் பெற்றுக்கொண்டார்கள். இவர்களில் யொவான்னே, செசிலி எனும் பெண்மணிகள் இருவரும் மொண்றியல்நகர் ஆஸ்பத்திரி ஒன்றில் நேர்ஸ்மாராகப் பயின்று வருகின்றனர். அனெற்றி எனும் பெண்மணி அந்நகரிலுள்ள கல்லூரிஒன்றில் சங்கீதம் பயின்றுவருகின்றாள். நான்காவதான மரியேஎன்பவள் நோய்வாய்ப்பட்டுள்ளதன் தாயாருடன் வீட்டிலே இருந்துவருகின்றாள்.

* * *

பரிசுத்தபாப்பரசர் சென்ற மார்கழிமாதம் அபாயகரமான நோய்கண்டிருந்து குணமடைந்தபின் முதன்முறையாகச் சென்றவைகாசி 30-ந் திகதியன்று சுமார் 1,500 யாத்திரிகர்களுக்குப் பொதுப்பேட்டி அருளியிருக்கின்றார்.

## கடவுள் பக்கமாகத் திரும்பும்ரூஷியா

"இன்றைய ரூஷியா பையமெல்லப் பதமையாக, ஆனல், நிச்சயமாகக கடவுள்பக்கமாகத் திரும்பிக் கொண்டிருக்கும் ஓர் கிறீஸ்துவ ஆத்துமமாகும்; இந்தச்சார்மானம் அத்தேச இளைஞர்கள் மத்தியில — முக்கியமாய்த் தங்கள் கல்வியிலுள்ள ஞானக்குறைபாடுகளால் மனச்சோர்வடைந்த மாணவர்கள்மத்தியில் — விசேஷவிதமாய்ப்பிரத்தியேகமாகக் காணப்படுகின்றது"

ரூஷிய சிறைமுகாம் ஒன்றிலிருந்து விடுதலையடைந்தபின் சமீபத்திலே ஓர்சனிக்கிழமை றோமைநகர் வந்துசேர்ந்த ஓர் யேசுசபைக்குருவரான வண. பீற்றர் லெயோனிசுவாமியவர்கள்தெரிவித்துள்ள அபிப்பிராயம்இதுவாகும். வடதுருவ வட்டாரத்தின்வடபால் சோவியற் சிறைமுகாம்ஒன்றிலே இவர் பத்துவருடகாலம் செலவிட்டுள்ளவர்.

"கம்யூனிஸ்த ஆட்சியால் — விசேஷமாய்க் குறூஷெவ் அதிகாரத்துக்குவந்தபின் — ரூஷிய மக்கள் சலிப்படைந்திருக்கிறார்கள்; கடந்த சிலமாதங்களிலே கைதுசெய்யப் படுவாரினதும், நாடுகடத்தப் படுவாரினதும் தொகை வெகுவாக அதிகரித்திருக்கிறது; உடனேதானே ஒருவரைக்கைதுசெய்து, இன்னதென அறியப்படாத ஓர் இடத்துக்கு ஏற்றியனுப்பிவிடுவதற்கு மிகஅற்பமான ஓர் கண்டன வார்த்தை, அன்றேல சாடைசைக்கினையே போதியதாகும்.

"பலவந்த தொழில்முகாங்கள அநேகம ஒழிக்கபபட்டு விட்டனவென்று அறிவிக்கப்பட்டதெல்லாம் முற்றுமே வெறுங்கபடவேஷமாகும். அவற்றின் முட்கம்பிவேலிகள் மாத்திரம் அகற்றப்பட்டுள்ளன. மற்றப்படி, சிறைக்கைதிகள் ஆயுதபாணிகளான பொலிசரின் கண்காணிப்பில் வேலைசெய்துகொண்டே போகிறார்கள்.

"லிதுவானியாவிலே பதின்மூன்றுகுருமார் விடுதலைசெய்யப்பட்டதாகிய அந்த அரும் வீரத்துவசெயலானது அங்கு வேதகலாபனை தணியவில்லையென்பதையே தெரிவிக்கின்றது. இந்தக்குருமார் துன்ப உபத்திரவங்களாலும், விருத்தாப்பியவயதாலும் அவ்வளவாகத் தளர்ச்சியடைந்து தங்கள் குருத்துவ பணிகளைத்தானும் ஆற்றமுடியாதவர்கள்.

"வோர்குட்டாவிலே சிறைக்கைதிகளின் அரசியற்புரட்சிக்கலகமானது, பேர்லின்நகர கலகஎழுச்சியையும், ஸ்ராலின் உயிர்மாண்டதையும் பற்றிக் கேள்விப்பட்டதும் ரூஷியர்களாலேதானே சுயமாகத் தொடக்கப்பட்ட ஓர்இயக்கமாகும். கம்யூனிஸ்தஆட்சி இதோ கவிழப்போகிறதென அவர்கள் நினைந்து கையில் அகப்படக்கூடிய எலலதயுமேகொண்டு தங்கள்காவலர்களைத் தாக்கினர்கள். இதிலே 100 சிறைக்கைதிகள் கொல்லப்பட, 400 பேர் காயமடைந்தார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

**பொதுக்கருத்து:** டக்றர்மாரும், நோயாளர்களைப் பராமரிக்கும் நேர்ஸ்மாரும் கடவுள்முன்பாகத் தங்கள்பொறுப்பை உணரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** சீனதேச இளைஞர்களுக்காக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
ஆனிமாதம் 16-ந் திகதி

## குடும்பசெபமாலை இயக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே குடும்பசெபமாலைப் படையணிஇயக்கம் நிகழும் ஆனிமாதம் 19-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றது. ஆனால், இது இம் மேற்றிராசனத்திலுள்ள சகல விசாரணைப்பங்குகளிலும் ஏககாலத்திலே ஆரம்பிக்கப்படாது ஒவ்வோர்பங்குபங்காய்த் தொடக்கிநடத்தப்படும். இதுமுந்தமுந்த யாழ்ப்பாண மேற்றிராசனக் கோவிலாகிய பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக் கோவில் விசாரணைப்பங்கிலே அன்றுதினம் ஆரம்பிக்கப்பெற்று ஐந்து வாரங்களாகத் தொடர்ந்துநடத்தப்படும். குடும்பசெபமாலைப் படையணியை இலகுவிலே நடத்தத்தக்கதாய் இவ் விசாரணைப்பங்கு இருபது சிறுபிரிவுகளாக வகுக்கப்பட்டுத் தலைவர், உபதலைவர், மற்றும் உதவியாளரைக் கொண்டதாயிருக்கும். ஆகவே, ஆசனக் கோவில் விசாரணைப்பங்கைச் சேர்ந்த கத்தோலிக்க குடும்பங்களெல்லாம் இந்தப்படையணியில் மனோற்சாகமாகச்சேர்ந்து ஒத்துழைத்து அதனைத் தங்கள் விசாரணைப்பங்கிலே ஆணித்தரமாக நிலைநாட்டி வைப்பார்களென எதிர்பார்க்கின்றோம்.

குடும்பசெபமாலை குடும்பங்களைப் பாதுகாக்கும். "ஒன்றித்துச் செபிக்குங்குடும்பம் ஒன்றித்துநிலைக்கும்" என்பது விருதுவாக்கியம். அதனால்குடும்பம் ஒன்றித்து நிலைக்கவேண்டுமா? ஒன்றித்துச் செபிக்கவேண்டும். ஒன்றித்துச்செபிக்க ஓர்சிறந்தசாதனம், குடும்பமாக ஒன்றுசேர்ந்து செபமாலை செபிப்பதேயாகும் செபமாலை ஒருசெபம். அதிகம் இலகுவானசெபம். இன்னும் மிக அழகும், மிகஅனுகூலமும்தருஞ்செபம். இன்றைய நிலைகுலைந்த உலகில் குடும்பங்கள் சீர்ப்படுத்தப் பட்டால்மட்டும் நிரந்தர சமாதானம் நிலவக்கூடும். குடும்பங்கள் சேமமுற்றால் உலகம் சேமமுறும். இந்த உந்நத குடும்பஒருமிப்பை உருவாக்கச் சக்திவாய்ந்தகருவி குடும்பசெபமாலையே. சீர்குலைந்த குடும்பங்களைச் சீர்பெற்றோங்கச்செய்வது குடும்ப செபமாலையே. "எங்கு இருவர் அல்லது மூவர் என் நாமத்தின் நிமித்தம் சேர்ந்திருக்கிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருக்கிறேன்" என்று திருவாய்மலர்ந்த திவ்விய யேசுவின் பொன்மொழியைப் பின்பற்றியொழுகச் சிறந்த ஓர் வழி குடும்பசெபமாலையே.

மாலைப்பொழுதிலே தினாந்த வேலை முடிந்தபின் கிறீஸ்துவ குடும்பங்கள் தேவதாயாரது திருச்சுரூபத்தின்முன்பாக ஒன்றாய்க் கூடியிருந்து செபமாலை செபிப்பது என்னமனோகர காட்சியாயிருக்கும்! மாதாவுக்கு மகிமையுண்டுபண்ணும் என்ன மங்கல காட்சியாயிருக்கும்! குடும்பசெபமாலை குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் இருதயங்களை ஒன்றாய் இணைக்கின்றது. இணையற்றஅன்பால் குடும்பத்தவர்கள் அனைவரையும் தேவஅன்னையின் இருதயத்துடன் பந்திக்கின்றது. அதனால், செபமாலையானது பரலோகஅன்னையுடன் குடும்பத்தவர்கள் ஒவ்வொருவரையும் பந்தித்துஒன்றிக்கும் தங்கச் சங்கிலியாகும். ஆதலால், யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே ஆரம்பிக்கப்படவிருக்கும் குடும்பசெபமாலைப் படையணி இயக்கத்துக்கு ஆசனக்கோவில் விசாரணைப்பங்கைச்சேர்ந்த கத்தோலிக்ககுடும்பங்கள் சிறந்தமுன்னோடிகளும், முன்மாதிரிகையுமாயிருந்து தங்கள்குடும்பங்களிலே குடும்பசெபமாலை நிரந்தரமாகநிலைபெறச் செய்வனவாக! சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டுமென்ற முதுமொழிக்கிணங்க, ஏற்கனவே குடும்பசெபமாலையை ஒழுங்காகச் செபித்துவரும் குடும்பங்களும் அதனை முன்னிலும்அதிகம் பக்திவேகத்துடன் செபித்துவர இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வனவாக! குடும்பவாசிகள் குடும்ப செபமாலையைத் தினமும்ஒருமித்துச் சத்தமாய்ச் செபிப்பார்களாக! குடும்பத்தைப்பிணைக்கும் அன்பாம்பந்தனம் குடும்பசெபமாலைஎன்பதை மறவாதிருப்பார்களாக!

---

## பூரண சூரிய கிரகணம்

1871-ம்ஆண்டு மார்கழிமாதம் 12-ந் திகதிக்குப்பின் — அதாவது, சுமார் 84 வருடங்களுக்குப் பின் இலங்கையிலே மறுபடியும் ஓர் பூரணசூரியகிரகணம் தோற்றவிருக்கின்றது. ஒருவர் தமதுசீவியகாலத்திலே அரிதாகக்கண்டுகொள்ளும் இயற்கைக் காட்சிகளுள் இதுவும்ஒன்றாகும். நாம் ஓர்பாலியராயிருந்தபோது கல்விபயின்ற கலாசாலையின் காலங்கண்ட தலைமையாசிரியர் 1871-ம் ஆண்டின் சூரியகிரகணத்தைக்காணும் அதிர்ஷ்டத்தைப் பெற்றிருந்தார். கிரகணத்தின்போது பூமுகம்இருண்டதும், பொழுது அஸ்தமனவேளையிற்போன்று கோழிகள் மரங்களிற்பறந்து படுத்துக் கொண்டதுமாகிய பலசம்பவங்களையும் அப்போதுஅவர் எடுத்துக்கூறியிருந்தார். இப்போது நாமே ஓர்பூரண சூரிய கிரகணத்தைக் காணப்போகிறோம். ஆனால், நாம் அதைக்கவலையீனமாகக் கண் [illegible] பார்ப்பதால் வரக்கூடிய ஆபத்தைப்பற்றிப் பிரபல டக்றர்மாரும், வானசாஸ்திரிகளும் விடுத்திருக்கும் எச்சரிக்கைகள்மட்டிலே விழிப்பாயிருக்க வேண்டும். பூரணசூரியகிரகணம் ஏற்படுமுன் கடுமையாகப் புகைகாட்டிய கண்ணாடிகளையோ, அன்றேல் புகைப்படம் பிடிக்கப்பட்ட அதிகம்கருமையான கால்பிளேற் பரிமாணமுள்ள கண்ணாடிகளையோ உபயோகியாது எவருமே வெறுங்கண்ணால் சூரியனைப்பார்ப்பது கண்ணுக்குக் கெடுதியாய்முடியும். அதிலும் பூரண கிரகணத்துக்குச் சூரியன் அணித்தாய்நிற்கும்போது அதை வெறுங்கண்ணால்பார்ப்பது கண்ணுக்கே மிகமிகக் கெடுதியாய்முடியும். முன்சொன்ன இருவகைக் கண்ணாடிகளைவிட, தண்ணீர்நிறைந்த ஓர் பாத்திரத்தை வெளியேவைத்து அதன்மூலம் கிரகணத்தைப் பார்க்கலாம், அன்றேல் அடர்த்தியான இலைகளைக்கொண்ட மரங்களின்கீழ் நின்றுகொண்டும் பார்க்கலாம். ஆயினும், ஒவ்வோர்முறையும் அற்பசொற்பநேரம்மாத்திரம் பார்க்கவேண்டும். கிரகணத்தைக் கண்டபடியெல்லாம் பார்ப்பதாலே சிலவேளை சிலநாட்களுக்குக் கண்பார்வை மங்கிவிடும். சிலவேளை முற்றாகவேமங்கிக் குருடராகவேண்டிய நிலைமை ஏற்படும். அன்றுகாலை 7-07 மணிக்குக் கிரகணம் ஆரம்பமாகும். 8-11 மணிக்குப் பூரண கிரகணமுண்டாகும். 8-15 மணிக்குப் பூரண கிரகணம் நீங்கிவிடும். 9-29 மணிக்குச் சூரியகிரகணம் முற்றாக நீங்கிவிடும். கிரகணத்தைப் பார்க்கும்விஷயமாய் ஈண்டுநாம் எடுத்துக்கூறிய பாதுகாப்பு முறைகளையும், மற்றும் அறிவிக்கப்படும் முறைகளையும்கையாண்டு கிரகணத்தின்போது நமதுகண்களைப் பாதுகாத்துக்கொள்வோமாக!

---

## வெளியேற்றப்பட்ட மேற்றிராணியார்

சீனாவிலே குவாங்சிமாகாணத்தைச்சேர்ந்த உவுச்சோநகரின் அமெரிக்க மேற்றிராணியாரான மகாவந். பிறெடெறிக் ஏ. டொனகி ஆண்டவரைச் சீனக் கம்யூனிஸ்தஅரசாங்கம் சென்ற வெள்ளிக்கிழமை ஹொங்கோங் தீவுக்குத் துரத்திவிட்டிருப்பதாகத் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இவர் செஞ்சீனாவாலே விடுதலைசெய்யப் பெற்றிருந்த முதல் மேற்றிராணியாராவர். 1951-ம்ஆண்டு சிறைச்சாலையிலிருந்து இவர் விடுதலைசெய்யப்பட்டதுமுதல் உவுச்சோ மேற்றிராசனத்திலே இவருடைய நடமாட்டம் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. இவர் மறுநாள் ஹொங்கோங்தீவில் பேசியபோது: செஞ்சீனாவில் பூரண சமயசுதந்திரம் இருந்துவருவதாக அதன்பிரதமர் சௌ-என்-லாய் விடுத்த அறிக்கை முற்றுமே பொய்யாகும்; இன்றுசெஞ்சீனாவில் அதிகம் தைரியசாலியான ஓர்மனிதர்தான் கிறீஸ்துவராக இருக்கமுடியுமெனத் [illegible]னர்.

## பாத்திமாவும் முதற்காட்சியும்

பாத்திமாவிலே தேவதாயார் முதற்காட்சியளித்த வருடாந்த தினமாகிய வைகாசிமாதம் 13-ந் திகதியன்றுதான் வருடத்தின் முதலாவது பெரியதிருயாத்திரை நடந்தேறும். அன்று தினம் இம்முறை அப்பதியிலே 706 பிணியாளர் உட்பட மூன்றரை லட்சம் யாத்திரிகர்கள்வரை சமுகமாயிருந்தார்கள். இவர்களில் அதிகமானோர் மகாலயபடிகளின் உச்சியில்அமைந்த வெளிப்புறப் பலிபீடத்தில் எழுந்தேற்றம்பண்ணி வைக்கப்பட்டிருந்த திவ்வியநற்கருணை முன்பாக முதல்நாள் இராமுழுவதும் செபஞ்செய்தபடியே இருந்தார்கள். அன்றுகாலை 6-30 மணிக்கு அப் பலிபீடத்தில் முதற்பூசை நிறைவேறியது. அவ்வேளை ஐம்பது குருமார் ஒரு மணி நேரமாகத் தேவநற்கருணைகொடுத்தார்கள். 8 மணிக்கு லிஸ்பன் நகரின் கருதினால் பத்திறியாக் ஆண்டவரும், போர்த்துக்கேய மேற்றிராணிமார்களும் சென்றவருடம் ஐப்பசிமாதம் அபிஷேகிக்கப்பட்ட அம்மகாலயத்தில் தாங்களே அபிஷேகஞ்செய்த அந்தந்தப் பலிபீடங்களில் திவ்விய பூசை நிறைவேற்றினார்கள். 10 மணிக்குத் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத் திருக்காட்சிச் சிற்றாலயத்திலிருந்து ஆரம்பமாயிற்று. சனத்திரள் அத்துணை பிரமாண்டமாய் இருந்தமையாலே சுற்றுப்பிரகாரமைதானத்தைச்சுற்றிச் செல்ல ஏறக்குறைய ஒருமணிநேரஞ் சென்றது. ஈற்றில் இரு கருதினால்மாரும், இருஅதிமேற்றிராணிமாரும் தனித்தனியே நற்கருணைக் கதிர்ப்பாத்திரங்கள் கொண்டு பிணியாளரை ஆசீர்வதித்தார்கள். அன்றுகாலை அங்குநிறைவேறிய பெரிய பாடற்பூசையிலே திருச்சபைப் பரிசுத்த கந்தோரின் பதிற்காரியதரிசியான கருதினால் ஒற்றாவியானி ஆண்டவர் போர்த்துக்கேயபாஷையில் நிகழ்த்திய பிரசங்கத்தில், "எங்குமே கிறீஸ்துசமயத்தை மறுமலர்ச்சியடையச்செய்ய ஒரேயொருவழி செபமே; அதிகம் வல்லமையுள்ள உலகப்பிரசித்திபெற்ற செபமாகிய செபமாலைஒன்றைக் கையில்ஏந்தியபடியே பரிசுத்த கன்னித்தாய் பாத்திமாவில் காட்சியளித்தார்; அது கிறீஸ்துநாதரது சத்துராதிகளின்மேல் கிறீஸ்துநாதரின் வெற்றியை நிச்சயப்படுத்துவதாகும்; உலகமானது தன்னை வதைசெய்துகொண்டிருக்கின்ற பயங்கர தீமைகளிலிருந்துவிடுதலையாகும்படியாய்ச் செபமாலைசொல்லிவாருங்கள்" என்க் கூறலாயினர். இவ்வருடம் வைகாசி 13-ந் திகதி தேவதாயார் பாத்திமாபதியிலே முதற்காட்சியளித்த 38-வது வருட நிறைவுதினமாகும்.

**புத்திமதி கூறுவதை விடக் கேட்பது அதிக சேமமானது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவநற்கருணைத் திருநாள்

நமது ஆசனக்கோவிலிலே சென்ற 12-ந்திகதி ஞாயிறுவாரம் தேவநற்கருணைத்திருநாள் வழமைபோல ஞானப் பரிமளிப்புடன் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 7மணிக்குக்கட்டளைக்குரவர் வண.பி. ரி. ஜேம்ஸ்சுவாமியவர்களால் பெரியபாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் குருத்துவ மாணவரும், பட்டணத்தின் நாலுபகுதிகளிலுமிருந்து நாலுகலாசாலைகளைச் சேர்ந்த மாணவர், மாணவிகளும், பத்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் பெருந்திரளானமக்களும் கோவில் கொள்ளாது தேங்கியிருக்க மகாவந். நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் குருமார் கூட்டத்துடன் கோவிலுக்கெழுந்தருளி, வேஸ்பர்பாடியதன்மேல் கதிர்ப்பாத்திரத்தைத்தமது கரங்களிலேந்தித் திவ்விய சற்பிரசாத நாதரை வீதியெழுந்தருளச்செய்தனர். பக்தர்குழாங்கள் புடைசூழ்ந்து செபங்கள்ஓதியும், திவ்வியகானங்கள் பாடியும், தீபதூபங்கள் காண்பித்தும், புஷ்பாஞ்சலிசெய்தும்நிற்க, அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிகளினூடாக நற்கருணைநாதர் திருப்பவனி கொண்டார். சந்தியோகுமையோர் கோவில் முன்றிலிலும், சம்பத்திரிசியார்கல்லூரிப் பெரியவாயிலிலும் அமைக்கப்பெற்றிருந்த அலங்காரமிக்க பீடங்களிலே திவ்வியநற்கருணை எழுந்தருளச்செய்து ஆசீர்வாதம் அருளப்பெற்றது ஈற்றிலே,கோவிலில் "தெதேயும்" பாடி அருளப்பெற்ற ஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவாயிற்று.

## மேயரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணநகர சுகாதாரவாரவிழாவின் கடைசிநாள் கொண்டாட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய யாழ்ப்பாணமேயர் காஸி எம். எம். சுல்தான் அவர்கள் நகரமக்களுக்குப் பின்வருமாறு ஓர்வேண்டுகோள் விடுக்கலாயினர். "யாழ்ப்பாண நகர்வீதிகள் குப்பைத்தொட்டிகளாகவே காட்சியளிக்கின்றன. வீதிகளிலே குப்பைகளெல்லாம் வீசப்படுகின்றன. இது தங்கள் நகரமென்பதை மக்கள் உணருகிறார்களில்லை. வீதிகளிலே குப்பைகளைப் போடுவதினால் அவர்களுக்கே நஷ்டமேற்படுகின்றது. அதனால், இப்பழக்கத்தைக் கைவிட்டுவிடும்படி நகரமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பாடசாலைப் பிள்ளைகள் ஒவ்வொருவரும், வயதுவந்தவர்களும் தங்கள் சுற்றுடலைப்பெருக்கித் துப்புரவாக வைத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இவ்விஷயமாக அவர்கள் நகரசபையுடன் ஒத்துழைத்தாலன்றி நகரைச் சுத்தமாக வைத்திருக்கமுடியாது."

## அரிசி, மாஇறக்குமதி

அடுத்தஇருமாதங்களிலும் இலங்கைக்கு அனுப்பப்படும் அரிசிக்கப்பல்களை நிறுத்திவைக்குமாறு கேட்டுச் செஞ்சீனாவுக்கும், பர்மாவுக்கும் நமது அரசாங்கம் செய்தி அனுப்பியிருக்கின்றது. அவ்வாறே அடுத்துநிகழும் ஆடிமாதத்தில் மாக்கப்பல்களை அனுப்பிவைப்பதை நிறுத்திவைக்குமாறு ஆஸ்திரேலியாவும் கேட்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்தநடவடிக்கை எடுக்கக்காரணம், கொழும்புத் துறைமுகத்தில் உணவுக்கப்பல்கள் வந்துதவிவதால் ஏற்படும்நெருக்கடியைத் தீர்ப்பதேயாகும். இவ்வாறு அரிசி, மா இறக்குமதியைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதாலே இலங்கையில் அரிசி, மாவின்நிலைமை பாதிக்கப்படமாட்டாது. நாட்டிலுள்ள களஞ்சியசாலைகளில் ஏராளமானஅரிசி சேகரித்து இருப்பிலே வைக்கப்பட்டிருக்கிறது அரிசிஇருப்புநிலைமை அதிகம் திருப்திகரமாக இருந்தபோதிலும் பிரமிக்கத்தக்கவகையிலே அரிசிப்பாவனை குறைந்துகொண்டு வருவதாகக் கமத்தொழில் – உணவு மந்திரிகாரியாலய நிரந்தரகாரியதரிசியான திரு. கே. ஆழ்வாப்பிள்ளைஅவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

## நெடுந்தீவுப் பிரயாணக்கஷ்டம்

நெடுந்தீவுமக்களின் கடற்பிரயாணம் வழமையிலே — விசேஷமாக, இந்தக் காலத்தில் மிகவுங்கஷ்டமானதாகும். இந்தக்கஷ்டத்தை நன்கறிந்தஅரசாங்கம் அவர்களின் பிரயாணவசதிக்கென்று இருபெரியமோட்டார்ப்படகுகளை உதவலாயிற்று. அதனால்அவர்களின்கஷ்டம் ஓரளவில் நீங்கியது. ஆனால்,இப்போது ஓர்மோட்டார்ப்படகு பழுதடைந்து பிரயாணத்தை நிறுத்திக்கொள்ள, மற்றமோட்டார்ப்படகுதான் இப்போது ஊர்காவற்றுறைக்கும், நெடுந்தீவுக்குமிடையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால் நெடுந்தீவுமக்கள் பிரயாணஞ்செய்யமுடியாது அனுபவிக்கும் கஷ்டமோ பெரிது.

## சிறந்த தீக்குச்சிப் பெட்டிகள்

இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் தீக்குச்சிப்பெட்டிகள் சிறந்ததாமுடையனவாய் இருக்கும்படியாகவிரைவிலே ஓர்சட்டம் ஆக்கப்படவிருக்கிறது. இப்புதியசட்டப்படி, குச்சிப்பெட்டிகள் உற்பத்திசெய்யும் முயற்சியில் புதிதாக ஈடுபடுகிறவர்கள் இனிமேல் தடைசெய்யப்படமாட்டார்கள். நல்லதரமான குச்சிப்பெட்டிகள் உற்பத்திசெய்யாத முதலாளிகள்எவரையும் நிறுத்திவிடக் கைத்தொழிற்தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படும். குச்சிப்பெட்டிகள் உற்பத்திசெய்கிறவர்கள் ஒவ்வொருவரும் வருடமொன்றுக்குக் குறைந்தபட்சம் ஆறுயிரம்பெட்டி குச்சிப்பெட்டிகள் உற்பத்திசெய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இந்தப்பெட்டி ஒவ்வொன்றும் 7,200 குச்சிப்பெட்டிகளை அடக்கியிருக்கும். தற்போது இலங்கையிலே குச்சிப்பெட்டிகள் உற்பத்திசெய்யும் முதலாளிகளாய்ப் பதின்மூன்றுபேரே இருந்துவருகிறார்கள்.

## அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணம், பரிசுத்தஅடைக்கலநாயகியின்ஆலயத்திலே நவதினவிழாக்களுடன் கொண்டாடப்பெற்ற அர்ச். சின்னத்தெரேசம்மாள்திருநாள் சென்ற 11-ந் திகதி சனிக்கிழமை முடிவுக்குவரலாயிற்று. அன்றுகாலை ஆலய கட்டளைக்குரவர் வண. வில்லியம் யேசுதாசன்சுவாமியவர்கள் திருநாட்பாடற்பூசை நிறைவேற்றினர். அத்தருணம் திரளான பக்தர்கள் சமுகமாயிருந்து திருப்பந்தியமர்ந்து திருநாளை ஞானவிதமாய்ச் சிறப்பித்தார்கள். பின்னர் சாயந்தரம் தேவநற்கருணைத் திருநாளைமுன்னிட்டுத் திவ்விய சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் பெரிதும் பக்தியருட்சிக்குரியவிதமாய்நடந்தேறியது. வண. ஜி. ரி பாலசுந்தரம் சுவாமியவர்கள் தெய்வீக விருந்தைப் பற்றியும், அவ் விருந்துப்பந்தியில் அடிக்கடி அமரவேண்டியதன் அவசியத்தைப்பற்றியும் செய்தபிரசங்கம் வடிதங்கம் போன்றிருந்தது. அதன்மேல் பலகுருமார் சமேதராய் வண. எல். ஏ. சிங்காரயர் சுவாமியவர்கள் திவ்விய சற்பிரசாத கதிர்ப்பாத்திரத்தைக்கரத்தேந்த, பாடசாலைப்பிள்ளைகளும், பக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், மற்றேனையோருமாகப் பெருந்திரளானமக்கள் முன்னும் பின்னுமாக அணிவகுத்துச்செல்ல, செபவோசைகள், திவ்விய சங்கீதவோசைகள், தூபதீபங்கள், புஷ்பாஞ்சலிகள்மத்தியிலே அலங்காரமுற்றிலங்கிய வீதிகள்வழியாகச் சுற்றுப்பிரகாரம் நடைபெறலாயிற்று. இடையிலே அமைக்கப்பெற்றிருந்த இரு அழகிய பந்தர்களிலே எழுந்தேற்றஞ்செய்து அருளப்பெற்ற ஆசீர்வாதத்துடனும், கடைசியாகஆலயத்தில் "தெதேயும்" பாடி அருளப்பெற்ற ஆசீர்வாதத்துடனும் சுற்றுப்பிரகாரவிழா இனிதே நிறைவாயிற்று.

# சுதேச வர்த்தமானம்

## பேராசிரியரின் எச்சரிக்கை

மட்டக்களப்பு, சென் மைக்கேல்கல்லூரிப் பரிசளிப்புவிழா சென்ற 13-ந் திகதி திங்கட்கிழமை சிறப்பாக நடந்தேறியது. அதற்கு இலங்கைச் சர்வகலாசாலைப் பௌதிகசாஸ்திரப் பேராசிரியர் ஏ டபிள்யு. மயில்வாகனம்அவர்கள் தலைமைவகித்தார். அவ்வேளை அவர்பேசியவிடத்து: "உங்கள்பிள்ளைகளின் வருங்காலம் அபாயத்திலே இருக்கின்றது; உங்கள்பிள்ளைகளின் கல்வியோடு அரசியல்வாதிகள் குரங்குச் சேட்டையிட நீங்கள் அனுமதிக்கக்கூடாது; ஆங்கிலம் போதனமொழியாயிருந்தாலென்ன, அன்றேல் இரண்டாம்மொழியாய் இருந்தாலென்ன அதன்தரம் வீழ்ச்சியடையாமல் பார்த்துக்கொள்ளப் பிள்ளைகளின் பெற்றோரும் தங்களால் இயன்றளவு கல்வி அதிகாரிகள்மீதும், அவசியம்ஏற்படின் அரசாங்கத்தின்மீதும் தங்கள் முழுச்சக்தியையும் பிரயோகிக்கவேண்டும்" எனக்கூறலாயினர்.

## சூரியகிரகணத்தன்று விடுமுறை

இம்மாதம் 20-ந்திகதியாகிய வருகிற திங்கட்கிழமை பாடசாலைகளுக்கெல்லாம் விடுமுறைநாளென்று வித்தியாதிபதி எல்லாப்பாடசாலைகளுக்கும் அறிவித்திருக்கின்றார். சூரியகிரகணத்தின்போது பாடசாலைப்பிள்ளைகளை ஆசிரியர்கள் கவனமாகப் பார்த்துக்கொள்ள முடியாதென்றும், அதனால் கிரகணத்தின்போது பிள்ளைகள் தங்கள்பெற்றோருடனே வீட்டிலிருக்கக் கூடியதாக அன்றுதினத்தை விடுமுறைநாளாக்க வேண்டுமென்றும் பெற்றோரின் தூதுக்கோஷ்டி ஒன்று செய்துகொண்ட மனுவின்பேரிலே வித்தியாதிபதி அந்நாளை விடுமுறைநாளாக்கியிருக்கிறார்.

## மத்தியமின்சார நிலையம்

யாழ்ப்பாணத்திலே மத்தியமின்சார நிலையம் அமைக்கும்வேலை வருகிறஐப்பசிமாதம் ஆரம்பமாகுமென்று தற்காலீகபோக்குவரத்து மந்திரியார் திரு. வி. குமாரசாமிஅவர்கள் தெரிவித்திருக்கின்றார். காங்கேசன்துறைத் துறைமுகத்தைத் திருத்திவளப்படுத்தும் வேலையும் அதேமாதத்தில்தான் ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு அடுத்துநிகழும்ஆடிமாதம் 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகாமண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தேறுமென அறிகின்றோம். இம்முறை அதிலே விசாரணைக்கிருக்கும் வழக்குகள் ஒன்பது. இவற்றிலே கொலைவழக்குகள் ஏழு. எஞ்சிய இரண்டும் கொலைசெய்ய எத்தனித்த வழக்குகளாகும். நீதியரசர் திரு.ஈ. எவ். என். கிறேஷன் அவர்கள் விசாரணைநடத்தவிருக்கின்றார்.

## பவரணை விடுமுறைநாட்கள்

பொயா—அதாவது பவரணை நாட்களெல்லாம் அரசாங்க விடுமுறைநாட்களாகப் பிரகடனஞ்செய்யப்பட வேண்டுமென உள்நாட்டுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயகஅவர்கள் மந்திரிசபைக்குச் சிபாரிசுசெய்யத் தீர்மானித்திருக்கின்றார். இந்தச்சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, வேலைநாட்கள் குறையமாட்டாவாம். வருடத்தில்வரும் பன்னிரு பவரணைநாட்களிலும் ஐந்துநாட்கள் — அதாவது துருது, வெசாக், போசன், ஏசால, உன்டுவாப் (சங்கமித்தைதினம்) என்பன அரசாங்கவிடுமுறைநாட்களாய் இருந்துவருகின்றன. ஏனையபவரணை விடுமுறைநாட்கள் ஒவ்வொன்றிற்கும் அந்தந்தமாதத்திலே ஒன்று அல்லது இரண்டு சனிக்கிழமைகள் முழுவேலைநாட்களாக்கப்படவேண்டுமென உள்நாட்டுமந்திரியார் ஆலோசனைகூறியிருக்கின்றார். பொயாநாட்கள் அரசாங்கவிடுமுறை நாட்களாக்கப்பட வேண்டுமெனத்தூண்டி லங்கா புத்தமண்டலாயம் செய்துள்ளபிரேரணையின்பேரில்தான் மந்திரியார் இவ்வாறு சிபாரிசுசெய்திருக்கின்றார்.

## மானிப்பாய் ஆஸ்பத்திரி

மானிப்பாயிலுள்ள கிறீன் ஞாபக மிஷன்ஆஸ்பத்திரியிலே அதிகார் எஸ். செல்லமுத்துஅவர்களின் முழுஉருவப் படம்ஒன்று சென்றசனிக்கிழமை பிற்பகல் தபால்–வானொலிமந்திரியார் திரு. எஸ். நடேசபிள்ளை அவர்களால் திரைநீக்கஞ்செய்து வைக்கப்படலாயிற்று. அவ்வேளை அவர்பேசியபோது, அமெரிக்கமிஷனரிமார் யாழ்ப்பாணத்துக்குச் செய்துள்ள அரும்பெருஞ்சேவைகளைப் பாராட்டலாயினர். அதிகார் செல்லமுத்துஅவர்கள் கிறீன் ஆஸ்பத்திரியிலே ஓர் மருந்துச்சாலையை அமைப்பதற்கென 27 வருடங்களின் முன் ஓர்கட்டடத்தை நன்கொடையாக வழங்கினர். இதற்கென அவர் தாராளமாக உதவியளித்திருந்தார். இந்த மருந்துச்சாலையிலே இதுவரை சுமார் ஐந்தரைலட்சம் நோயாளர்கள் சிகிச்சை பெற்றிருக்கின்றார்கள்.

## இரண்டாயிரம் ஏக்கர்நிலம்

பூநகரியிலே வளப்படுத்தப்படாத மட்டுவில்நாட்டுக் கிராமத்தின் கரையோரமாகவுள்ள முடிக்குரிய காணியிலே இரண்டாயிரம் ஏக்கர் நிலம் தென்னைபயிரிடுவதற்காக நடுத்தாவகுப்பினருக்கெனச் சென்ற 13-ந் திகதியன்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனை ஒதுக்குவதற்காக யாழ்ப்பாணக் கச்சேரியிலே அன்றுதினம் வடமாகாண ஏசன்றர்அவர்கள் ஓர் காணிக்கச்சேரி நடத்தினர். அங்கு காணிபெற்றவர்கள் தென்னை பயிரிடுவதற்கென அரசாங்கத்திடமிருந்து எந்தஉதவியையும் எதிர்பார்க்கமுடியாது. அதற்குவேண்டிய மூலதனத்தையும், காலநேரத்தையும் அவர்கள்கொண்டிருக்கவேண்டும்.

## நகரசபைக் கம்மிஷனர்

நீர்கொழும்பு, நகரசபைக்கம்மிஷனராக இருந்துவருகிறவரான முகாந்திரம் ஈ. செல்வராஜாஅவர்கள் அடுத்தமாத ஆரம்பமுதல் யாழ்ப்பாண நகரசபைக்கம்மிஷனராக மாற்றப்படவேண்டுமெனத் தலதாபன ஆட்சிச் சேவைக் கம்மிஷன் ஆஞ்ஞாபித்திருக்கின்றது. யாழ்ப்பாண நகரசபைக் கம்மிஷனரான திரு. கே. சண்முகம் அவர்கள் நீர்கொழும்பு நகரசபைக் கம்மிஷனராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். முகாந்திரம் செல்வராஜாஅவர்கள் தலதாபன ஆட்சிச்சேவையிலே இருபத்தைந்து வருடங்களுக்குமேல் கடமையாற்றியிருக்கின்றார். முன்பு இவர் நுவரெலி நகரசபைக் கம்மிஷனராகவும் கடமைபார்த்து வந்திருக்கின்றார்.

## பஸ்ஊழியர்களின் தகுதி

பஸ்கண்டக்றர்மார், டிக்கெற்பரிசோதகர்களின் கல்வித்தரம் உயர்த்தப்படவிருக்கிறது. தற்போது பஸ்கண்டக்றர் ஐந்தாம்வகுப்பிலும், டிக்கெற்பரிசோதகர் எட்டாம்வகுப்பிலும் அரங்கேறியிருந்தால்போதும். இனிமேல் பஸ் கண்டக்றர்மார் குறைந்தபட்சம் ஆங்கிலம், சிங்களம், அல்லதுதமிழில் எட்டாம்வகுப்பிலும், டிக்கெற்பரிசோதகர் ஜே. எஸ். சி. அன்றேல் அதற்குச் சரியானவகுப்பிலும் தேறியவர்களாய் இருக்கவேண்டும். திருத்தியமைக்கப்பட்ட மோட்டார்தப் போக்குவரத்துச் சட்டத்திலே இந்தக்கல்வித்தாரதம் விதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அம்புலியே! வா!



"ஜெயம்"

நீல வான வீதியோடும் அம்புலி வா! வா!
நீந்தி நீந்தி அழகுகாட்டும் அம்புலி வா! வா!
பாலர் ஆடும் பந்துபோல அம்புலி வா! வா!
பகலைப் போலும் நிலவுகாலும் அம்புலி வா! வா!

காடும் மலையும் கடந்துபோகும் அம்புலி வா! வா!
கரிய முகிலுள் மறைந்துபோகும் அம்புலி வா! வா!
ஓடும் வெள்ளிப் படகுபோல அம்புலி வா! வா!
உலகைச் சுற்றிப் பவனிபோகும் அம்புலி வா! வா!

குருவி போலப் பறந்துபோகும் அம்புலி வா! வா!
குளிர்ச்சி வெள்ளம் பொழிந்துபோகும் அம்புலி வா! வா!
அருவிமீது உருகி யோடும் அம்புலி வா! வா!
அலைக ளோடும் குலவியாடும் அம்புலி வா! வா!

அழுத பிள்ளைக் குவகையூட்டும் அம்புலி வா! வா!
ஆம்பல் தன்னை மலரவைக்கும் அம்புலி வா! வா!
முழுதும் உன்னை உலகுக்கீயும் அம்புலி வா! வா!
மோட்ச வீட்டின் வழியைக்காட்டும் அம்புலி வா! வா!

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

அடுத்த வெள்ளிக்கிழமை திருஇருதயத் திருநாள். நேசத்தின் திருநாள். நிந்தைப் பரிகாரத் திருநாள். யேசுதாமே கொண்டாடும்படி கேட்டுக்கொண்ட திருநாள்.

இத்திருநாளைச் சிறப்பித்துக் கொண்டாடுவது யேசுவின் விருப்பம். ஆகையால், அவருடைய விருப்பத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்.

எப்படி நிறைவேற்றுவோம்? யேசுவின் எல்லையற்ற நேசத்தை நினைப்போம். எவ்விதமாய் அவர் நம்மை நேசித்திருக்கிறார்? தமது இரத்தத்தைக் கடைசித்துளி மட்டும் சொரிந்து எம்மை மீட்டார். தம்மையே எமக்கு உணவாகத் தருகிறார். இன்னும் எமது பீடங்களில் பலியாகிறார். இந்த நேசத்திற்கு வரம்பில்லை. எமது கடமையென்ன? நேசத்திற்குப் பதில்நேசம். அவர் தம்மை எமக்குத் தருகிறபடியால் நாமும் எம்மை அவருக்கு அளிக்கவேண்டும்.

அம்மட்டா! நாமும், பிறமனிதரும் அவருடைய கற்பனைகளை மீறுகிறோம். அவரை நேசிக்க வேண்டிய கடமை இருக்க நாம் அவரைச் சட்டைபண்ணாது விடுகிறோம். அவருடைய அன்பரும், அடியாருமா யிருக்கவேண்டிய நாம் பிசாசின் அடிமைகளாகிறோம். எமது பாவங்களினால் அவரை மனம் நோகச் செய்கிறோம். இதையிட்டு நாம் துக்கித்து அனுதாபப்பட வேண்டுமல்லவா? அவர் அனுபவிக்கும் துக்கதுயரத்தை மாற்றவேண்டு மல்லவா?

இத்திருநாளின்போது சற்பிரசாதம் உட்கொண்டு யேசுவின் திருஇருதயத்துக்குப் பதில்நேசம் காண்பித்து, நிந்தைப் பரிகாரம் செய்வோம். திருஇருதயப் பக்தியை—நொந்துருகும் நேசத்தின் பக்தியை எம்மில் வளர்ப்போம். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## திருப்பலி

### சிறு எழுந்தேற்றம்

பூசைவேளையில் எழுந்தேற்றம் எப்பொழுது நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அது தேவவசீகரத்தின்பின் நடக்கிறது. முதல் குருவானவர் பரிசுத்த அப்பத்தைத் தலைக்குமேல் உயர்த்திக் காட்டுகிறார்; பின்பு எல்லாரும் பார்க்கும்படி பாத்திரத்தை உயர்த்துகிறார். ஆண்டவரை நாம் ஆராதித்து, அவரை எவ்வளவாக நேசித்து விசுவாசிக்கிறோமென்பதைக் காட்டுவதற்குத் தகுந்த தருணம் இதுவாகும்.

இதைவிட, சிறு எழுந்தேற்றம் என்று வேறொரு சடங்கு இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியுமா? அது பூசையில் தேவவசீகரத்துக்குப் பின் நடக்கிறது. அவ்வேளை குருவானவர் தேவவசீகரமான அப்பத்தையும், இரசத்தையும் சிறுக உயர்த்துகிறார். நீங்கள் அருகில் நின்றால் அல்லாமல், மற்றப்படி அது உங்கள் கண்ணுக்குத் தெரியாது.

இந்தச் சிறு எழுந்தேற்ற நேரத்திலே கருத்து நிறைந்த ஒரு செபம் சொல்லப்படுகிறது. அது சிறுசெபம். அதை இன்று படிப்போம்.

குருவானவர் "அவர் மூலமாகவே ஆண்டவரே, இந்த நன்மைகளையெல்லாம் தேவரீர் எப்போதும் சிருட்டித்து, பரிசுத்தப் படுத்தி, உயிர்ப்பித்து, ஆசீர்வதித்து எங்களுக்குத் தந்தருளுகிறீர்." இந்தச்செபத்திலே "அவர்மூலமாக" என்பது கிறீஸ்துவையே குறிக்கும்.

பரிசுத்தப்படுத்தி, உயிர்ப்பித்து, ஆசீர்வதித்து என்று சொல்லும்போது குருவானவர் காணிக்கைப் பொருட்களின்மேல் மூன்று முறை சிலுவை வரைகிறார்.

கிறீஸ்துநாதரைக் குறித்துக் குருவானவர் தொடர்ந்து செபிக்கிறதாவது: "அவர் தம்மூலமாயும், அவர் தம்மோடும், அவர் தம்மிலேயும், சருவத்துக்கும்வல்ல பிதாவாகிய தேவரீருக்கு இஸ்பிரீத்து சாந்துவின் ஐக்கியத்தில் எல்லாப் புகழ்ச்சியும் மகிமையும்." இவைகளைச் சொல்லும்போது, குருவானவர் தேவவசீகர அப்பத்தை வலது கை விரல்களால் பிடித்து ஐந்துதரம் சிலுவை வரைகிறார். பின்பு, திருஅப்பத்தைப் பாத்திரத்துக்குமேல் பிடித்து இரண்டையும் சற்று உயர்த்தி இந்தக் கிருத்தியத்தை முடிக்கிறார். இதுதான் சிறு எழுந்தேற்றம்.

இச்செபத்தின் கருத்து என்ன? என்ன படிப்பினையைப் பெறுகிறோம்? நாம் சர்வேசுரனிடமிருந்து பெற்றுக் கொள்ளுகிறதெல்லாம் கிறீஸ்துநாதர் வழியாய் எமக்குக் கிடைக்கின்றன. நாம் சர்வேசுரனுக்குச் செய்வதையெல்லாம் கிறீஸ்துநாதரில், கிறீஸ்துநாதர்மூலம் நிறைவேற்ற வேண்டும்.

மேற்கூறிய வசனம் கடைசி இராப்போசனத்தின்போது எமது ஆண்டவர் கூறியவற்றை நினைவூட்டுகிறது. அதாவது, "நான் திராட்சை. நீங்கள் கொப்புகள். கொப்புகள் மரத்துடன் சேர்ந்திராவிடில் கனிதர மாட்டா" என்றார். ஆண்டவருடன் ஒன்றித்திராவிடின் சர்வேசுரனுக்கும், மோட்சத்துக்குமுரிய கனிகொடோம். நிலையான அருளின்வழியாய் அவருடன் நாம் ஐக்கியப்பட் டிருக்கவேண்டும்.

எமது ஆத்துமத்தில் தேவ இஷ்டப்பிரசாதம் இருந்தால் நாம் செய்யும் நன்மைகளெல்லாம் சர்வேசுரன் முகதாவில் விலையேறப் பெற்றவையாகும். நல்லதூதன் எமது நாமங்களைச் சீவியத்தின் புத்தகத்தில் எழுதிவைப்பார். நன்றாய்ச்செய்த நற்கிருத்தியங்களெல்லாம் பொன்எழுத்துகளில் பொறிக்கப்படும்.

பிறசமயத்தவருள் நடந்ததையல்ல எமது கிறீஸ்துவர்களுள் நடக்கக்கூடியவற்றை நினைக்கும்போது இது உண்மையென்று புலப்படுகிறதல்லவா?

## இரண்டுவிதம்

ஒருநாள் ஈசோப்பின் எசமான் தான் அழைத்திருக்கும் சிநேகிதருக்கு நல்ல விருந்தொன்று ஆயத்தஞ் செய்யும்படி அவனுக்குக் கட்டளையிட்டான். வேலைகாரன் தன் எசமானுடைய கட்டளையைச் சுமுத்திரையாய் அனுசரிக்க விரும்பினான். எல்லோரும் பந்தியில் உட்கார்ந்தபொழுது ஈசோப் உணவு பரிமாறினான். நான்குவிதமாய் நாக்குகளைச் சமைத்துப் பரிமாறினான்.

எசமான் கோபங்கொண்டு நீ இப்படிச்செய்யக் காரணம்என்னவென்று கேட்க, திறமான உணவுதயாரிக்கச் சொன்னீர்கள்; நாவைவிடத் திறமானது என்ன? மனிதருக்கு இந்த நாவால் எத்தனை நன்மை உண்டாகிறது என்று ஈசோப் மறுமொழி சொன்னான்.

பழிவாங்கும் எண்ணத்துடன் "இந்தச் சிநேகிதரை நாளைக்கும் நான் அழைத்திருக்கிறேன்; நல்லது, நீ அதிக கேடான உணவைத் தயாரி" என்றான் எசமான்.

அடுத்தநாளும் அதே உணவையே பரிமாறினான் அடிமை ஈசோப். எசமானுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. "நாவைவிடக் கேடுகெட்டது என்ன? அதனால் உண்டாகும் தீமைகளுக்கும், கேடுகளுக்கும் கணக்குண்டா?" என்று மறுமொழிசொன்னான் அடிமை.

## பெந்தெக்கோஸ்துவின் பின் 3-ம் ஞாயிறு

### நிருபம்: 1 பேதுரு, 5:6-11

பாடின்றிப் பட்டமில்லை. முள்ளின்றி றோஸா இல்லை. சிலுவையின்றி மகுடமில்லை.

இவ்வுலகத்தில் நாம் கஷ்டப்பட்டால்தான் மறுஉலகத்தில் மகிமை பெறலாம். ஆகையால், சம்பாவனை கொடுக்கும் வேளை சர்வேசுரன் எங்களை மகிமைப்படுத்தி "உயர்த்தும்படிக்கு" இப்பொழுது அவருடைய கற்பனைகளை அனுசரித்து, கட்டளைக் கமைந்து, பணிந்து "உங்களைத் தாழ்த்திக்கொள்ளுங்கள்."

சர்வேசுரன் எங்களை உண்டாக்கி விட்டுக் குயவனைப்போல் அக்கறையின்றி இருப்பவர் அல்லர். "உங்களை விசாரிக்கிறவர்." ஆகையால், உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றிற்குரிய "கவலைகளை யெல்லாம் அவரிலே போடுங்கள்."

கவலையைச் சர்வேசுரனிலே போட்டாலும் கஷ்டமில்லாமற் போகாது. பிசாசு எங்களைக் கெடுப்பதற்குக் "கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் திரிகிறது." அதற்குப் பயப்படாமல் "விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாயிருங்கள்."

துன்பங்களை அனுபவிக்கிறவர்கள் நீங்கள் மாத்திரமென்று எண்ணாதேயுங்கள். உலகத்திலுள்ள "உங்கள் சகோதரருக்கும்" இவை உண்டு.

சர்வேசுரன் எங்கள்மேல் கண்ணுங் கருத்துமாயிருந்து விசாரிக்கிறவர் என்று அப்போஸ்தலர் முன்கூறினார் அல்லவா?

கிருபையுள்ள சர்வேசுரன் துன்பப்படுகிறவர்களை உத்தமமாக்கி, உறுதிப்படுத்தி, ஸ்திரப்படுத்துவார். நம்பிக்கைக்கு இடமுண்டு.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

● சென்னை இராச்சியத்திலுள்ள 66 மத்திய சிறைச்சாலைகளிலே நூல் நூற்கும் கைத்தொழிலை ஆரம்பிக்கச் சென்னை அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகக் கிராமக் கைத்தொழிற்சபை அறிக்கையிட்டிருக்கிறது. இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கெனச் சென்னை அரசாங்கம் 30,300 ரூபா ஒதுக்கிவைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரு வினுக்கள்

1. சூரிய கிரகணம் எப்படி உண்டாகிறது?

2. சந்திர கிரகணம் எப்படி உண்டாகிறது?

3. அதிகங்கூடிய நேரமாய்ப்பூரண சூரியகிரகணம் எத்தனைநிமிஷம் நீடித்திருக்கும?

4. அடுத்த பூரணசூரிய கிரகணம் எப்போது உண்டாகவிருக்கிறது?

5. இந்த 20-ம்நூற்ருண்டிலே இதுவரைஏற்பட்ட பூரணசூரியகிரகணங்களில் அதிகநேரம் நீடித்திருந்த கிரகணம் எப்போது உண்டாயிற்று?

6. இந்த 20-ம்நூற்ருண்டிலே அதிகம் குறைந்தநேரம் நீடித்திருந்த பூரணசூரியகிரகணம் எப்போதுஉண்டாயிற்று?

7. பொதுவாகப் பூரணசூரியகிரகணம் எத்தனைவருடங்களுக்கு ஒரு முறை உண்டாகிறது?

8. இம்மாதப் பூரணசூரியகிரகணத்தைப்போல் ஏறக்குறையச் சரிவர இனிமேல்எப்போது உண்டாகும்?

9. இந்த 20-ம்நூற்ருண்டில் எத்தனை பூரணசூரியகிரகணங்கள் உண்டாகுமென்று வானசாஸ்திரிகள் சென்ற 19-ம்நூற்ருண்டிலே கணக்கிட்டிருந்தார்கள்?

10. இந்தநூற்ருண்டின் முதலாவது பூரணசூரியகிரகணம் எப்போது உண்டாயிற்று?

11. இந்தநூற்ருண்டின் கடைசியான பூரணசூரியகிரகணம் எப்போது உண்டாகும்?

12. இலங்கையிலே இதற்குமுன் கடைசியாகப் பூரண சூரியகிரகணம் எப்போது தோற்றியது?

(இந்த விணுக்களுக்கு விடைகள் தெரிந்தால் மற்ருேர்பக்கத்தில் காணப்படும் விடைகளை அவற்றுடன்ஒப்பிட்டுப் பாருங்கள்.)

— A. G.

## பூரண சூரியகிரகணம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### கிரகண ஆராய்ச்சி

இந்தப்பூரணசூரியகிரகணம் இலங்கையில் நான்குநிமிஷங்கள் வரையும், கிரகணப்பாதையிலுள்ள இடங்களிலே ஆகக்கூடியது ஐந்துநிமிஷங்கள்வரையும் காட்சியளிக்கும. ஆகவே, இம்மாதம் 20-ந் திகதியன்று நாம்காணவிருக்கும்காட்சி ஓர்சரித்திரப்பிரசித்திவாய்ந்த காட்சிமாத்திரமல்ல, அநேக ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்தாக்கூடிய காட்சியாகவுமிருக்கும. அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, ஜேர்மனி, ஒல்லாந்து, ஜபபான, கனடா முதலிய பலநாடுகளிலுமிருந்து அநேக விஞ்ஞானிகள் — வானசாஸ்திரிகள் — மிகவிலையுயர்ந்தகருவிகளுடன் இக்கிரகணத்தைப்பார்வையிட்டு ஆராய்ச்சி செய்வதற்காக இலங்கைவருகிருர்கள். இவர்கள் கிங்குருக்கொடை, சிகிரியா, பொலநறுவை, திரிகோணமலை, கல்முனைமுதலிய இடங்களிலிருந்து இச்சூரியகிரகணத்தைப் பரிசீலனைசெய்து ஆராய்ச்சிநடத்தவிருக்கின்ருர்கள்.

### சூரியகிரகண குருடர்கள்

மேலும் இச்சூரியகிரகணத்தைக் கண்டுகளிக்கவிருக்கின்றநாம் கண்களுக்கு எதுவிதபாதுகாப்புமில்லாது இதைப்பார்ப்பது ஆபத்தாகுமென்றும் கூறுகின்ருர்கள். பூரண சூரியகிரகணத்தை வெறுங்கணகளால் பார்க்கும்போது கண்களிலுள்ள சிலநரம்புகள் தாக்கப்பட்டு ஈற்றிலே சூரியகிரகண குருடராகிவிடுகின்றனரென்றும் கண் வைத்தியநிபுணர்கள் கூறுகின்ருர்கள். ஆகவே, நாம் அதைப்பார்ப்பதற்குச் சிலபாதுகாப்புகளைக் கையாளுதல் அவசியமாகும். புகைக் கண்ணுடியையேனும், எக்ஸ்றேஅல்லாத பட'நெகற்றிவ்'களையேனும் இதைப்பார்க்க உபயோகப்படுத்தலாம்.

## பொதுவர்த்தமானம்

### இந்திய யூதர்கள்

இந்தியாவிலும் யூதர்கள் இருக்கின்ருர்களா? ஆம். இக்காலத்திலே வந்து குடியேறிய யூதர்களைத்தவிரப் புராதன காலத்தில் வந்துகுடியேறிய யூதர்களும் இந்தியாவில் இருக்கின்ருர்கள். இவர்களில் ஒருபாலார் திருவாங்கூர்—கொச்சி இராச்சியத்தின் தென்கரையிலும், மற்ருேர்பாலார் பம்பாயைச் சேர்ந்த கோலாபா எனுமிடத்திலும் இருந்துவருகின்ருர்கள். தென்னிந்திய யூதர்கள் கி. பி. முதலாம் நூற்ருண்டிலே இந்தியாவுக்கு வந்ததாகத் தற்போதுகண்டறியப் பட்டிருக்கிறது. பம்பாய்யூதர்கள் கி. பி. ஆரும்நூற்ருண்டிலே அராபிய ஏமென்நாட்டிலிருந்து வந்ததாக நம்பப்படுகிறது.

### தம்பதிகளின் பிரயாணம்

பந்தையக்கார் சாரதியும், நூலாசிரியருமான திரு. எவ். ஜே. தவெயிற்றிஸ்என்பவர் சமீபத்திலே லண்டன் நகரிலிருந்து "ஹில் மன் ஹஸ்கி" என்ற பிரித்தானியகார்ஒன்றிலே ஆஸ்திரேலியாவைநோக்கிப் பிரயாணப்பட்டிருக்கின்ருர். இவருடன் ஜெசிக்கா என்ற இவர்மனைவியும்,முறையே 11,15 வயதுடைய ரேகர், கிறேஎன்ற இரு புதல்வரும் பிரயாணஞ்செய்கின்றனர். இவர்கள் பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்து, ஜேர்மனி. ஆஸ்திரியா, ஈருன், ஈருய்க், லெபனன், பலுக்கிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, இலங்கைஉட்பட 20 நாடுகள்கண்டு ஆஸ்திரேலியா போய்ச் சேருவார்கள். பிரயாணமுடிவில் திரு. தவெயிற்றிஸ் தமதுபிரயாண அனுபவத்தைப்பற்றி ஓர்புத்தகம் எழுதவிருக்கின்ருர்.

### மதுவிலக்கும் பிறதேசமதுபானமும்

இலங்கையின் முன்னைநாள்பிரதமர் திரு டட்லி சேனநாயக அவர்கள் இலங்கையிலே மதுபான பாவனையை அறவே ஒழித்துவிடுமாறு தீவிரபிரசாரஞ் செய்துவருகின்ருர். ஆனல், இலங்கையிலே கள், சாராயப் பாவனையை ஒழிக்குமுன் அதற்கோர் ஆரம்பமாய் முந்தப் பிறதேசமதுபானங்களை இறக்குமதிசெய்வதைத் தடைசெய்ய வேண்டுமெனப் பலரும் கருத்துக் காட்டுகின்றனர். சென்ற 5-ந் திகதியன்று பரந்தன் சேமாபிவிர்த்திச் சங்க கூட்டத்தில் திரு. வி. சின்னத்துரை அவர்கள் பேசியபோது: பிறதேசமதுபான இறக்குமதியை உடனேதடைசெய்யவேண்டும்; இதுசெயலால் மதுபானவிலக்குக்கு உதவிசெய்வதோடு நாட்டின்செல்வம் வெளியேருமலும் பாதுகாக்கலாம்; அடுத்தபடியாகச் சாராயத்தவறணைகளைமூடிக் கடைசியாகவே கள்ளுத்தவறணைகளை மூடவேண்டுமெனக் கூறியிருக்கின்ருர்.

### புதிய சத்திர சிகிச்சை

கனடாதேச ரொறன்ரோநகரிலே சென்ற 11-ந்திகதியன்று இருசிறுவர்களின் சேதமடைந்த இருதயங்களைச் சத்திரவைத்தியர்கள் பழுதுபார்த்துக் கொண்டிருக்கும்போது, செத்தகுரங்குகளின் சுவாசப்பைகள்வழியாக அவர்களுக்குச் செயற்கைமுறையில் இரத்த ஓட்டம் கொடுக்கப்பட்ட புதியசத்திரசிகிச்சையொன்று செய்யப்படலாயிற்று. அந்நகரிலுள்ள குழந்தைகளின் ஆஸ்பத்திரியில் டக்றர் வில்லியம் ரி. மஸ்டர்ட்செய்த இந்தச் சத்திரசிகிச்சை வெற்றிபெற்றதென்று "குளோப் அன் மெயில்" என்னும் அந்நகரபத்திரிகை அறிக்கையிட்டிருக்கிறது. மின்னிசொடா சர்வகலாசாலையில் நடைபெற்ற இதேபோன்ற சத்திரசிகிச்சைகளில் நாயின்சுவாசப்பைகள் உபயோகிக்கப்பட்டன.

---

✻ தேனீக்களும், வண்ணத்திப் பூச்சிகளும் எவற்றைக்கொண்டு எதையும் சுவைபார்க்கின்றன?

வாயையும், கால்களையுங்கொண்டு சுவைபார்க்கின்றன.

## தலைவில் பெரியசந்தானுள் நாயகியின்

### அதிஉன்னத ஆடி மகோற்சவம்

### 31—7—55

ஆடி 17: கொடியேற்றம். தினமும் மாலை 6-30 நவநாள்.

ஆடி 23: பொண்ரிவிக்கல் வெஸ்பேர்ஸ்.

ஆடி 24: முதலாந் திருநாள். காலை 7 மணிக்குப் பாடற்பூசை.

ஆடி 30: மாலை 6-30 மணிக்குப் பொண்ரிவிக்கல் வெஸ்பேர்ஸ்.

ஆடி 31: பெரிய திருநாள். காலை 6-30 மணிக்குப் பொண்ரிவிக்கல் பாடற் [பூசை.

ஆடி 28-ந் தேதி வியாழக்கிழமை மாலை திவ்விய சற்பிரசாதநாதர் ஊர்வலம் நடைபெறும். இயற்கை-செயற்கைப் புஷ்பங்கள் அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒருசில வாடிவீடுகள் மாத்திரம் காலி. ஏமாற்றந் தவிர்க்க ஏற்கெனவே எழுதி ஒழுங்கு செய்க. வாடிவீட்டு வாடகையோ, கடைக்கூலியோ, ஆடி 15-ந் தேதிக்கு முன்னதாக அதிவண. பரிபாலன சுவாமியாரிடம் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

மரக்கறி-பானக்கடைகள் ஒழிந்த ஏனையகடைகள் ஆராதனைவேளைகளில் மூடப்பட்டிருத்தல்வேண்டும். யாத்திரிகர்களின் வசதிக்காகத் தளவாடச் சாமான்கள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

"மோட்டார் கார்" வாகனங்களின் பாதுகாப்பிற்காகக் கார்பாக்கில் கொட்டில்கள் அமைக்க உத்தேசித்திருப்பதால் வேண்டியவர்கள் தயவுசெய்து ஆடி 10-ந் தேதிக்குமுன் அதிவண. பரிபாலன சுவாமியாருக்கு அறிவிக்கவும்.

**அதிவண. ஆர்தர் மாட்டின் பர்நாந்து**
பரிபாலன பங்குசுவாமியார்

தலைவில், 27-5-55

---

## அறிவுச் சுடர்

✻ அமெரிக்க ஐக்கியதேசத்திலே உலகப்பிரயாணிகளின் கவனத்தை உலகிலேயே தற்போது அதிகமாக ஈர்ந்துவரும் கட்டடம் யாது?

நியூயோர்க்நகரிலுள்ள ஐக்கியநாடுகளின் ஸ்தாபனகட்டடமே. அதைக் காணவென்று உலகின் சகலபகுதிகளிலுமிருந்து இடையருதுபோய்ச் சரிந்துகொண்டிருக்கும் தரிசகர்கள் அதன்பல்வேறு கட்டடங்களினூடாக வழிகாட்டிகள்மூலம் வழிநடத்தப்படுகின்ருர்கள்.

✻ உலகின் மகா உயரமான நீர்வீழ்ச்சி எது?

வெனிசியூலாநாட்டிலே 3,212 அடி உயரத்திலுள்ள "ஏஞ்ஜெல் போல்ஸ்" எனப்படும் நீர்வீழ்ச்சியே. இது அந்நாட்டிலே ஏறக்குறையக் கிட்டிச்சேரவியலாதபகுதியில் இருப்பதால் மிகச் சிலபேர்களே இதைப் பார்த்திருக்கிருர்கள்.

✻ உலகில் மகாவேகமாய் ஓடக்கூடிய நாய்எது?

சலூக்கிஎன்ற இனத்தைச்சேர்ந்த நாயே. இது மணித்தியாலம் 55 மைல் வேகத்தில் ஓடக்கூடியது. "கசெல்லெஸ்" எனப்படும் சிற்றின மான்களை வேட்டையாடுதற்கென்றே பெடுயின் சாதியார் இதனைவளர்த்துவந்தார்கள்.

✻ "நேற்ரே" (N. A. T. O.) என்று பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருக்கிறதே. அது எதனைக் குறிக்கிறது?

"நேற்ரே" என்பது வட அத்திலாந்திக் உடன்படிக்கைஸ்தாபன (North Atlantic Treaty Organisation)த்தைக் குறிப்பதாகும்.

✻ "நேற்ரே" எதற்காக ஏற்படுத்தப்பட்டது?

கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பிலிருந்து மேற்கு ஐரோப்பியநாடுகளைப் பாதுகாப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது.

✻ "நேற்ரே" கவுண்சிலில் முந்த எத்தனைநாடுகள் சேர்ந்துகொண்டன?

பிரித்தானி, பிரான்ஸ், அமெரிக்க ஐக்கியதேசம், இத்தாலி, கனடா, பெல்ஜியம, ஒல்லாந்து, கிறீஸ்என்பனவாய்ப் பதினுன்கு சுதந்திரநாடுகள் சேர்ந்துகொண்டன.

✻ "நேற்ரே"வில் கடைசியாகச் சேர்ந்துகொண்ட நாடுஎது?

சமீபத்தில் சுதந்திரம் அடைந்துகொண்ட மேற்குஜேர்மனியே.

✻ "நேற்ரே" என்பதை வேறு எவ்விதம் சொல்லலாம்?

மேற்குஐரோப்பாவின் பெரியபாதுகாப்பு ஐக்கியஸ்தாபனம் என்றுசொல்லலாம்.

✻ "சிற்ரே" (S. E. A. T. O.) என்பது எதைக்குறிக்கின்றது?

"தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை ஸ்தாபனம்" (South-East Asia Treaty Organisation) என்பதைக் குறிக்கின்றது.

✻ "சீற்ரே" எதற்காக ஏற்படுத்தப்பட்டது?

கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பிலிருந்து தென்கிழக்கு ஆசியநாடுகளைப் பாதுகாப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது.

✻ "சீற்ரே"வில் எத்தனைநாடுகள் சேர்ந்திருக்கின்றன?

பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், தாய்லாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலாம் எட்டுநாடுகள் சேர்ந்திருக்கின்றன.

✻ சுதந்திரமான தேர்தல்களிலே சனங்கள் வாக்களிக்கும் உரிமையைப் புராதனத்தில் கொண்டிருந்த நாடு எது?

கிறீஸ்நாடேயாகும். இற்றைக்கு 2,400 வருடங்களின்முன்னரே இந்த உரிமை அந்நாட்டில் இருந்துவந்தது. அப்போது சனங்கள் வாக்குச்சீட்டுகளுக்குப்பதிலாகக் கூழாங் கற்களைக் கழுத்தொடுங்கிய பாத்திரங்களில் — அதாவது தண்டங்களில் போட்டுவந்தார்கள்.

✻ சாதாரண வீட்டு ஈஒன்றிலிருந்து ஓர்பருவகாலத்தில் எத்தனை கோடிசந்ததிகள் — அதாவது எத்தனை கோடிஈக்கள் பலுகிப்பெருகும்?

500 கோடிஈக்கள் பலுகிப்பெருகும். அதனுல்தான் ஈக்களைக் கொன்றழிப்பது சுகாதாரத்துக்கு மிக அவசியமாகும்.

✻ உலகின் மகாப்பெரிய குடியரசுநாடு எது?

தென்னமெரிக்காவைச் சேர்ந்த பிறேசில்நாடேயாகும். இது 32,87,842 சதுர மைல் விஸ்தீரணமுடையதாகும்.

✻ அமெரிக்க ஐக்கியதேசத்திலே ஓர்மோட்டர்ரதம் எப்படிச் செய்யப்படுகிறது?

உலகின் 56 நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் முந்நூற்றுக்கு மேற்பட்ட பொருட்களைக்கொண்டு செய்யப்படுகிறது.

✻ ஒரு அவுண்ஸ் ரோசா அத்தர் வடிக்க எத்தனை ரோசாப்பூக்கள் தேவைப்படுகின்றன?

இரண்டுலட்சம் ரோசாப் பூக்கள் தேவைப்படுகின்றன. அதன் இதழ்களிலிருந்தே இந்தஅத்தர் வடிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு விடைகள்

1. சூரியனுக்கும், பூமிக்குமிடையே சந்திரன் வந்துநின்று சூரியப்பிரகாசம் பூமியில்விழாது மறைக்கும்போதே சூரியகிரகணம் உண்டாகிறது.

2. சூரியனுக்கும், சந்திரனுக்குமிடையே பூமிவந்துநின்று சூரியப்பிரகாசம் சந்திரனில்விழாது மறைக்கும்போது தான் சந்திரகிரகணம் உண்டாகிறது.

3. ஏழரைநிமிஷம் நீடித்திருக்கும். அதற்குமேல் அதுஒருபோதுமே நீடித்திருக்கமாட்டாது. இம்மாதம் 20-ந் திகதி உண்டாகவிருக்கின்ற பூரண சூரியகிரகணம் பிலிப்பைன்ஸ்தீவுகளில் 7·2 நிமிஷம் நீடித்திருக்கும். இந்த 20-ம்நூற்றுண்டிலே அதுநீடித்திருக்கும் அதிகங்கூடியநேரம் இதுவாகும்.

4. 1973-ம்ஆண்டு ஆனிமாதம் 30-ந் திகதியன்று உண்டாகவிருக்கிறது. இது தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, அத்திலாந்திக் சமுத்திரத்திற்குமேலாக உண்டாகி 7·2 நிமிஷநேரம் நீடித்திருக்கும். கடந்த 1,250 வருடங்களிலே உண்டான எந்தச் சூரியகிரகணமும் 7·2 நிமிஷங்களுக்குமேல் நீடித்திருக்கவும்இல்லை. அம்மட்டா! 2168-ம் ஆண்டு ஆடிமாதம் 6-ந்திகதி உண்டாகவிருக்கும் பூரணசூரிய கிரகணம்வரையில் எந்தப்பூரணசூரிய கிரகணமும் 7·2 நிமிஷங்களுக்குமேல் நீடித்திருக்கப் போவதுமில்லை.

5. 1937-ம் ஆண்டு ஆனிமாதம் 8-ந் திகதி ஏற்படலாயிற்று. இது 7·1 நிமிஷநேரம் நீடித்திருந்தது.

6. 1927-ம்ஆண்டு ஆனிமாதம் 29-ந் திகதி உண்டாயிற்று. இது 0·7 நிமிஷமே நீடித்திருந்தது. இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து, ஸ்காண்டிநேவிய நாடுகளுக்குமேலாக இது தோற்றியது.

7. ஏறக்குறையப் 19 வருடங்களுக்கு ஒருதடவை உண்டாவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த இடைப்பட்டகாலம் "சாரோஸ்" (Saros) என அறியப்படுகிறது.

8. 1973-ம் ஆண்டு ஆனிமாதம் 30-ந் திகதி உண்டாகும். அதனால், திகதியில் சொற்பமாற்றமே ஏற்படும்.

9. 61 பூரண சூரியகிரகணங்கள் உண்டாகுமென்று கணக்கிட்டிருந்தார்கள். இவற்றிலே 32 கிரகணங்கள் ஏற்பட்டுவிட்டன. இம்மாத கிரகணத்தைவிட இன்னும் 28 கிரகணங்கள் ஏற்படவிருக்கின்றன.

10. 1900-ம் ஆண்டு வைகாசிமாதம் 28-ந் திகதி உண்டாயிற்று. இது அமெரிக்க ஐக்கியதேசம், ஸ்பெயின், வட ஆபிரிக்கநாடுகளுக்கு மேலாகத் தோற்றியது.

11. 1999-ம்ஆண்டு ஆவணிமாதம் 11-ந் திகதிஉண்டாகும். இது மத்திய, தென் ஐரோப்பிய நாடுகளுக்குமேலாக இங்கிலாந்துவரை தோற்றும்.

12. 1871-ம் ஆண்டு மார்கழிமாதம் 12-ந் திகதியன்று இலங்கையின் வடபாகத்திலேயே இதுதோற்றியது. மாரிகாலமாய் இருந்தமையால் இதைத் தெளிவாகப் பார்க்கமுடியாமற் போய்விட்டது.

# செபமாலை இல்லாமலே

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

கோரமான பஸ்விபத்து! 20பேர் அந்த இடத்திலேயே உயிர்மாண்டனர்! மீதியானவர்கள் பிழைப்பதுஅரிது!"

'நேற்றுஇரவு முல்லை யூருக்குக் கடைசியாகவிடப்பட்ட 10 மணி பஸ் மகிழமலையில் போய்க்கொண்டிருக்கும் போது சறுகிப் பாதையினின்றும் விலகிப் பயங்கரவிபத்துக் குள்ளாகியது. அதிலே பிரயாணம்செய்தவர்களில் 20 பேர் அந்தஇடத்திலேயே இறந்தனர். எவ்வளவோசிரமப்பட்டுத்தேடிஎடுக்கப்பட்ட மற்றவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டும்உயிர்பிழைக்கமுடியாத அபாயநிலையிலே இருக்கிறார்கள். இம்மாதிரிக்கோரமானபஸ்விபத்து இதற்கு முன் இப்பகுதியில் நடந்ததேயில்லை.'

'விபத்துநேர்ந்த பஸ்ஸிலே நானும் போயிருந்தால் சிலவேளை என்னை நீ உயிருடன்பார்த்திருக்க முடியுமா இரத்னு? செபமாலையை எடுத்துவர வேண்டுமென்பதற்காகப் பஸ்ஸைநிறுத்தச்சொல்லி நான் இறங்காதிருந்தால் ஆம், என் கதி என்னவாயிருக்கும்? நேரவிருந்த உயிர்ஆபத்தை ஆச்சரியகரமாகப் போக்கித்தந்தது என் செபமாலையல்லவா? என்று உருக்கத்துடன் கூறினன் செல்வராஜ்.

—அ. அல்போன்ஸ்
ச. போ.

## GOVT. NOTICE

### Forest Dept.

N1558—17 new Satin and Ranai logs; 2 old Milla logs; 60 pieces sawn timber, 14 pieces broken sawn timber and 146 rejected Fence Posts will be sold by Public Auction at the Chavakachcheri Timber Depot by the D.F.O., N.D., Jaffna on 25-6-55 commencing at 9 a.m. Intending purchasers are requested to acquaint themselves with the special conditions governing the sale which are available with the Depot Keeper, Chavakachcheri where the timber can be inspected by arrangement.

## அரசாங்க அறிவித்தல்

### வனபரிபாலன இலாக்கா

N. 1558— 17 புதிய முதிரை, ரூணை மரங்கள்; 2 பழைய காட்டாமணக்கு மரங்கள்; 60 அரிந்த மரத்துண்டுகள்; 14 அரிந்த முறிந்த மரத்துண்டுகள்; 146 கழித்த கம்பிக்கட்டைகள்முதலியன 25-6-55 காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி அரசினர் மரக்காலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனவுக்கு முன் அவற்றைப் பார்க்க விரும்புவோர் டிப்போக் கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடுவதுடன், அவரிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்துகொள்ளவேண்டும்.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

செய்வதற்கு அருமையான ஒருமருந்தை யேசுவின் திருஇருதய இரக்கத்தையும், சதாசகாயநாயகி, அர்ச். சூசையப்பர் இவர்களது மன்றுட்டத்தையும் கேட்டுக்கொண்டதினல் என்மனம்பூரிக்க எல்லாம் நன்றாய்முடிந்ததற்கு அடியேனின் ஸ்துதியை அவர்கட்குச்செலுத்தி நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

S. A.

* * *

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினுலும், பரிசுத்த கன்னிமரியாயினதும், அர்ச். சூசையப்பரினதும் மன்றுட்டினுலும் நான் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். நன்றியாக இதனைக் 'காவல'னில் பிரசுரிக்கிறேன், இன்னுமோர் பரீட்சையில் சித்தியடையவும், வேறும் மூன்று விண்ணப்பங்கள் நிறைவேறவும் நான் இவர்களை இரந்துநிற்கிறேன்.

ம. அ.

* * *

கஸ்திப்படுகிறவர்களின் தேற்றரவாளரான பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரின் ஏழுவியாகுல, சந்தோஷங்களைக் குறித்து வேண்டியமன்றுட்டுக் கிடைக்கப் பெற்றேன். அத்திருவியாகுல, சந்தோஷங்கட்கு எனது நன்றியறிந்த தோத்திரத்தைச் சமர்ப்பித்து நேர்த்தியின்படி பிரசுரித்துக்கொள்ளுகின்றேன்.

[illegible]
வங்காலை

## அர்ச். அந்தோனியார் திருநாள்

### மானிப்பாய்

நிகழும் 10-6-55 வெள்ளிக்கிழமை நோவனைகள் ஆரம்பமாகும். தினமும் மாலை 6-30 மணிக்கு நோவனைகள் தொடங்கும்.

18-6-55 சனிக்கிழமை மாலை 7 மணிக்குத் திருநாள் வேஸ்பர்.

19-6-55 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாட் பூசையும், அதனைத் தொடர்ந்து திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும்.

கட்டளைக் குரவர்
மானிப்பாய்

## அறிவித்தல்

### நவநாட் செபங்கள்

பின் குறிப்பிடப்படும் நவநாள் துண்டுப் பிரசுரங்கள் உங்களுக்குத் தேவையாயின் இனமாக அனுப்பப்படும். அவற்றினல் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் பெரும் உதவி கிடைக்கும் என்பதே எமது நோக்கம். நீங்கள் விரும்பிய பிரசுரத்தை நாங்கள் அனுப்புவோம்.

10 சத முத்திரையுடன் பின்வரும் விலாசத்திற் கெழுதவம்.

சிறுமலர்ச் சங்கம்,
பெரியவிளான், இளவாலை.

தமிழ்ப் பிரசுரங்கள்:

1. பாத்திமா நாயகியின் நவநாட் செபங்கள்.
2. யூதா ததேயுஸ் அப்போஸ்தலரின் நவநாட் செபங்கள்.

இங்கிலிஸ் பிரசுரங்கள்:

1. The T. B. Saint
2. Novena to Blessed Martin De Porez.
3. Fatima and the Rosary.

## தேவநற்கருணைத் திருவிழா

போளவத்தை, அர்ச். உத்தரியநாயகியின் ஆலயத்திலே சென்ற 12-6-55 ஞாயிறுவாரம் தேவநற்கருணைத் திருவிழா அதிவிமரிசையாக நடந்தேறியது. அன்றுகாலை 7 மணிக்குக் கட்டளைக்குரவர் வண. யு. கிளமென்ற் பர்ணந்து சுவாமியவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றியபின் திவ்வியநற்கருணையை எழுந்தேற்றஞ்செய்துவைத்தார். வழமைபோல விசாரணைப்பங்குக் கத்தோலிக்கமக்கள் சற்பிரசாதநாதரை ஒழுங்குப்பிரகாரம் சந்தித்து ஆராதனை வழிபாடு நடத்திவந்தார்கள். பின்னேரம் 4-30 மணிக்கு வண. சி. எம். பர்ணந்து சுவாமியவர்கள் பலகுருப்பிரசாதிகள்உதவிபரிய மாலைஆராதனை பாடியபின்னர் தமிழ்ப்பாஷையில் ஓர் பிரசங்கஞ்செய்ய, அதிவண. திசேரு சுவாமியார் சிங்களப்பாஷையில் ஓர்பிரசங்கம் நிகழ்த்தினர். அதன்மேல் நற்கருணைநாதரின் திருப்பவனி ஆரம்பமானது. முந்தியவருடங்களைப்போலவே நமதுதெய்வீக அரசர் பவனிசென்ற பாதைகள் அலங்காரகாட்சியளிக்க, பாடசாலைச்சிறுவர், சிறுமியர், கன்னியாஸ்திரிமார், குருப்பிரசாதிகள் மற்றும்ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் தூயவெண்ணுடைதரித்துப் பக்திசிரவணத்துடன் சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்டகாட்சி மிகமாட்சியாயிருந்தது. சுற்றுப்பிரகாரம் சுமார் இருமணிநேரத்தின்பின் ஆலயத்தை அடையவே "தெதேயும்" என்னும் தேவதோத்திர கீதம் பாடப்பட்டுக் கடைசித் தேவநற்கருணை ஆசீர்வாதத்துடன் விழாஇனிது முடிவுற்றது.

வ. அனக்கிலேத் லோவு
அங்கம்பிட்டி.

## நாளுசங்கதிகள்

● "ஸ்பானிய அரசாங்கம் ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் சேர்ந்துகொள்ள ஆசிக்கின்றது; ஆனல், தற்போதையநிலைமைகளிலே ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வேண்டி மனுச்செய்துகொள்ள ஸ்பெயின்விரும்பவில்லை" என்று ஐக்கியநாடுகளின் பொதுச்சபையிலே ஸ்பானியஅரசாங்கத்தின் முதலாவது அவதானியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜோஸ் செபஸ்ரியன் ஒஷியாஅவர்கள் நியூயோர்க்நகரிலே சென்றசனிக்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

● அமெரிக்க ஐக்கியதேசத்திலே காணமற்போனவர்களைக் கண்டுபிடித்துக்கொடுக்கும் ஸ்தாபனம் ஒன்று இருந்துவருகிறது. காணமற்போன தங்கள்கணவன்மார்களைக் கண்டுபிடித்துத் தரும்படியாகப் பதினையாயிரம் பெண்களும், காணமற்போன தங்கள் மனைவியர்களைக் கண்டுபிடித்துத்தரும்படியாக 15 கணவன்மார்களும் சென்றவருடம் இந்த ஸ்தாபனத்துக்கு விண்ணப்பஞ் செய்துள்ளார்களாம்.

● பொதுத்தேர்தல் முடிந்தபின் முதன்முறையாகப் பிரித்தானிய புதிய பாராளுமன்றம் சென்ற 7-ந் திகதியன்று கூடியது. இந்தப்புதிய பாராளுமன்றத்திலே பிரதமர் சேர். அந்தோனி ஈடன் அவர்களின் கன்சர்வேற்றிவ்கட்சி மற்றெல்லாக் கட்சிகளையுஞ் சேர்ந்த அங்கத்தவர்கள் தொகையைக்காட்டிலும் 59 அங்கத்தவர்களைக் கூடுதலாகக் கொண்டுள்ளது. முந்தியபாராளுமன்றத்தில் அது 18 அங்கத்தவர்களையே கூடுதலாகக் கொண்டிருந்தது.

● அமெரிக்க ஐக்கியதேசத்திலே பனையோலைவிசிறிகளுக்கு அதிகமானம் ஏற்பட்டிருக்கின்றது. அதனல் ஐம்பதினுயிரம் பனையோலை விசிறிகளை அனுப்பிவைக்குமாறு மலாயாவிடம் கேட்கப்பட்டிருப்பதாய் ஐக்கியமலாய கிராம – கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபன காரியதரிசி சமீபத்தில் தெரிவித்திருக்கின்றார். ஆனல், இத்தனை ஆயிரம் விசிறிகளையும் உதவமுடியாத நிலைமையிலே மலாயா இருக்கின்றதாம்.

● கிரகங்களுக்குப் பறந்துசெல்லக்கூடிய ஆகாயவிமானங்களை அணுச்சக்திமூலம் இயக்குவது சாத்தியமாகுமென்று ருஷியவிஞ்ஞானிகள் தத்துவமுறையாகக் கண்டுபிடித்திருக்கிறார்களென மஸ்கோவானெலி சென்ற 12-ந் திகதி தெரிவித்திருக்கின்றது. இதுசம்பந்தமான ஆராய்ச்சி இனிமேல் பரீட்சார்த்தமாகநிச்சயிக்கப்படவிருக்கிறது.

● அதிகம்பருமனுக இருப்பவர்களை மெலியவைக்கும்படி லிஸ்ரி பெறினட் என்ற ஓர்பிரான்சியமாது நவீனமாதிரியான ஓர்சட்டையைக் கண்டுபிடித்துச் செய்திருக்கின்றாள். இந்தச்சட்டையைப் போட்டுக்கொள்ளுகிறவரும் தினமும் இரண்டுறாத்தல்வீதம் நிறையிற்குறைந்து மெலிந்துகொண்டே போவார்களாம்.

● இந்தோ–சீனவிலே கம்யூனிஸ்த வடவியெற்னம் நாட்டில் வசித்திருந்த பத்துலட்சம் வியெற்னமிய மக்கள் அங்குகம்யூனிஸ்தர்களின் கொடுங்கோல் ஆட்சிக்கஞ்சித் தங்கள் முன்னோர்களின் வீடுகளைக்கைநெகிழ்ந்து சுதந்திரதென்வியெற்னமிலும்,பிறநாடுகளிலும்போய்க் குடியேறியிருக்கிறார்களெனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

❊ மனிதன் இதுகாலவரை உலகில் எப்போதாவது இறங்கியுள்ள மிக ஆழமான இடம் எது?

அமெரிக்க ஐக்கியதேசத்தில் வையோமிங் எனுமிடத்திலுள்ள ஓர் எண்ணெய்க்கிணறேயாகும். இது 20,521 அடி—அதாவது 4 மைலுக்கு மேல் ஆழமுடையது

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 16 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org